வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 05 | 21.11.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 345 | பக்கங்கள் : 16




## தடுப்புக்காவலில் வைத்துத் தாக்கப்பட்டுள்ள இளைஞர் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு மரணம்!

### உடற்கூற்று பரிசோதனையில் வெளியான பரபரப்பு தகவல்

யாழ்ப்பாணம், நவ. 21

திருட்டுக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் கடுமையாக அடித்து துன்புறுத்தப்பட்டதால் சிறுநீரகம் பாதிப்புக்குள்ளாகியே உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்திய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் நேற்று நண்பகல் உடற்கூறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே வைத்திய அறிக்கையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் 11



## தினேஷ் - பிரசன்னவுடன் ரணில் இரகசிய சந்திப்பு

கொழும்பு, நவ. 21

கொழும்பு அரசியல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவையும் இரகசியமாக அழைத்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் மிகவும் இரகசியமான முறையில் நடைபெற்ற அந்தச் சந்திப்பு அரை மணி நேரத்துக்கும் மேலாகத் தொடர்ந்தது 11

# கொக்குத்தொடுவாய் புதைகுழிக்குள் மேலும் மனித எச்சங்கள் இருக்கலாம்!

### பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சந்தேகம்




முல்லைத்தீவு, நவம்பர் 21

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் வீதிக்கு குறுக்காகவும், வீதிக்கு அடியிலும் கூட சிலவேளை மனித எச்சங்கள் இருக்கக் கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது என ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 11



## போராட்டம் வெடிக்கும் என அச்சம் பாதுகாப்பை பலப்படுத்திய பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ. 21

வட்டுக்கோட்டை பொலிஸ்நிலையத்தை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தமை தொடர்பில் அவரது உறவினர்களால் பொலிஸார் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதிகளில் போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கான சாத்தியம் நிலவுவதாக 11

## நாடு முழுவதும் சிவப்பு சீனி விநியோகிக்க நடவடிக்கை

கொழும்பு, நவ. 21

வெள்ளை சீனி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக, நத்தார் பண்டிகை காலத்தை இலக்கு வைத்து நாடு முழுவதும் சிவப்பு சீனியை தட்டுப்பாடின்றி விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என லங்கா சீனி நிறுவனத்தின் பணிப்பாளர் காமினி ராசபுத்ர தெரிவித்துள்ளார்.

அண்மையில் அதிகரிக்கப்பட்ட வரி காரணமாக சீனி விலை அதிகரித்தமையால் சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து 11

## ராஜபக்ஷக்களை தூக்கிலிடவேண்டும்

### மகிந்தவுக்குச் சஜித் அணி பதிலடி

கொழும்பு, நவ. 21

இலங்கையின் பொருளாதாரத்தைச் சீரழித்த ராஜபக்ஷக்களையும் அவர்களின் சகாக்களையும் தூக்கிலிட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

"நாட்டில் பொருளாதார நெருக்கடியை 11

## எதிர்பார்ப்புக்கு மத்தியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி!

முல்லைத்தீவு,நவ. 21

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் மீள நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் 15



வரை அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தன. இவ் அகழ்வுப் பணியில்17 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையிலும் 11

### சித்தங்கேணி இளைஞன் உயிரிழந்த சம்பவம்

## சம்பந்தப்பட்ட பொலிஸாரை உடன் கைது செய்யவேண்டும்

### சட்டத்தரணி மணிவண்ணன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ. 21

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வழுக்கம்பரை பகுதியில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் என்ற 23 வயது இளைஞன் உயிரிழந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது எனவும், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பொலிஸாரை உடனடியாக கைது செய்ய வேண்டும் எனவும் சிரேஷ்ட சட்டத்தரணியும் யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்தில் சிவில் சமூக குழுவினர் ஏற்பாடு செய்திருந்த கருத்தாடல் குறித்து பல்வேறு கோணத்திலும் பலரும் விமர்ச்சித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

அவ்வப்போது சிலர் தமது எண்ணங்களில் தோன்றுவதை சொல்வதற்காக அறிக்கைகளை தயாரித்து வெளியிடுகின்றபோது, அதனை சிவில் சமூகம் என்ற பெயரில் வெளியிட்டு வருவதை பலரும் அவதானித்திருப்பீர்கள்.

ஒருவரோ அல்லது இருவரோ சேர்ந்து தயாரிக்கின்ற அறிக்கையை சிவில் சமூகம் என்ற பெயரில் வெளியிடுவதும் அதனை அப்படியே ஊடகங்கள் வெளியிட்டுவிடுவதும் பல வருடங்களாக நடந்து வருவதுதான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு பயணம்செய்த போது, அவரை பதின்மூன்றை வலியுறுத்தக்கோரி இந்தியப் பிரதமருக்கு வடக்கு கிழக்கிலுள்ள முக்கிய கல்வியாளர்கள், மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் என்று ஏராளமானவர்கள் கையெழுத்திட்டு ‘சிவில் சமூக குழு’ என்ற பெயரில் ஒரு கடிதம் அனுப்பிய போதும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

வழக்கம்போல, ‘வயிற்றுக்குத்து வந்தாலும் அதற்கும் சில நாட்டின் உளவு அமைப்புக்களுக்கும் தொடர்பு இருப்பதாக” எழுதுகின்ற அல்லது பேசுகின்ற சிலர் இதற்கும் அவ்வாறு முலாம் பூச முற்பட்டனர். அப்படி நடக்காமல் விட்டிருந்தால்தான் நாம் அதுபற்றி யோசித்திருக்க வேண்டும்.

இவை பழைய சங்கதிகள். ஆனால் இப்போது அந்த சிவில் சமூக குழுவினர் யாழ்ப்பாணத்தில் அரசியல் ‘கருத்தாடல்’ என்ற பெயரில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்தக் கருத்தாடலின் முக்கிய நோக்கம் இன்றைய தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இயங்குன்ற கட்சிகள் அனைத்தையும் ஒரே அணியில் இயங்கவேண்டும் என்ற விருப்பத்தை அவர்களுக்கு தெரிவிப்பதே.

அதனால்தானோ என்னவோ தமிழ் மக்கள் மத்தியில் இயங்குகின்ற தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஒருசேர அழைத்துவிட்டு, அவர்களுக்கு அதன் அவசியத்தை வலியுறுத்தி சில பேச்சாளர்கள் பேசினார்கள். அதாவது தமது கருத்தை அங்கே பதிவுசெய்தார்கள்.

இந்தக் கூட்டம் குறித்து கருத்து தெரிவித்திருந்த ஒரு கட்சித் தலைவர், ‘நாங்கள் நாற்பது வருட அரசியல் அனுபவமுள்ளவர்கள், எங்களுக்கு மூன்றுபேர் வகுப்பு எடுப்பதா?” என்று கேட்டதாக கூறப்பட்டது. நாற்பது வருடமல்ல, எழுபது வருடமாக நீங்கள் சொன்னதைத்தானே நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஒரு நாள் இரண்டு மணி நேரம் நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்கக் கூடாதா? என்று கூட்ட ஏற்பாட்டாளர்களோ அல்லது பேச்சாளர்களோ கேட்டார்களோ தெரியவில்லை.

அந்த கருத்தாடல், தமிழ் கட்சிகள் ஒற்றுமையாகவேண்டும் என்ற கருத்தை தலைவர்கள் முன் வைப்பதற்கான சிறிய முயற்சியாக ஏன் பாக்கக்கூடாது என்பது தெரியவில்லை. அப்படி அந்த கருத்தாடலுக்கு ஏற்பாடு செய்தவர்கள், ஒற்றுமைக்கான முயற்சிகள் எதனையும் அந்தக் கருத்தாடல் நிகழ்ச்சியில் செய்யவில்லை என்றும் குறை கூறப்பட்டிருக்கின்றது.

வெறுமனே மூன்றுபேர் பேசிச் சென்றால் போதுமா என்றும் கேட்கப்பட்டது.

இதுபோன்ற கூட்டம் ஒன்றின் மூலம் மட்டும் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்திவிடமுடியாது என்பது எவராலும் புரிந்து கொள்ளக்கூடியதே. ஆனால், இது போன்ற கூட்டங்களை நடாத்தி, கட்சிகள் ஒற்றுமைப்படவேண்டியதன் அவசியத்தை மக்கள் மத்தியில் கொண்டுசென்று, அதன் அவசியத்தை மக்களே இந்த தலைவர்களுக்கு அழுத்திச் சொல்வது போன்ற முயற்சிகளை இதுபோன்ற கூட்டங்கள் எற்படுத்தும் என்பதையும் தவிர்க்க முடியவில்லை. தேர்தல் என்றதும் தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களிப்பதற்கு இது கடைசிச் சந்தர்ப்பம் என்று ஒவ்வொரு தோதலிலும் சொல்கின்ற தலைவர்கள், ‘தாம் ஏன் தமக்குள் ஒற்றுமைப்படக்கூடாது” என்று கேட்கின்ற உரிமை நிச்சயம் தமிழ் மக்களுக்கு உண்டு.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு தலைவர், ‘தந்தை செல்வாநயகமும் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து தனித்து வந்து மக்களைச் சந்தித்தபோது மக்கள் அவரை ஏற்றுக்கொண்டார்கள். எனவே தனித்து இயங்குவது சரியா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்” என்று கூட்டத்தின் பின்னர் வாதிட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது.

காங்கிரஸ் கட்சியிலிருந்து செல்வநாயகம் வெளியேறியது, காங்கிரஸ் கட்சி தமிழ் மக்களுக்கு துரோகம் செய்கின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசு வெளியேறியது, ‘இந்த உள்ளூராட்சி தேர்தல் முறையில் பிரிந்து நின்று கேட்டால் அதிக ஆசனங்களை பெறலாம்” என்ற காரணத்திற்காக. இப்படித்தான் அப்போது சொல்லப்பபட்டது.

ஆக, தந்தை செல்வா பிரிந்து வந்தபோது அதனை மக்கள் ஏற்றுக் கொண்டதையும் அதிக ஆசனங்களுக்காக பிரிந்து போனதையும் முடிச்சுப்போடுவது, மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது போன்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் உலகையே திரும்பிப்பார்க்க வைக்கும் அளவிற்கு மிகப்பலமான இயக்கமாக இருந்தபோது, நமது அரசியல் கட்சிகள் எல்லாம் பிரிந்து நின்று தனித்தனியாக இயங்குவது அரசியல் ரீதியாக பலவீனமானது என்று கருதியே, அப்போது இருந்த கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். அவர்கள் முன்னதாக தடைசெய்து வைத்திருந்த இயங்களும் அதில் அடக்கம். அவர்கள் மக்கள் ஆதரவு பற்றி மட்டும் சிந்தித்திருந்தால், தமிழரசு கட்சியையோ அல்லது காங்கிரஸ் கட்சியையோ தனித்து தமது ஆதரவை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தால், அன்று ஒட்டு மொத்த தமிழர்களும் அவர்கள் காட்டுகின்ற கட்சிக்கே வாக்களித்திருப்பார்கள். மக்கள் ஆதரவுள்ள அந்த கட்சி மாத்திரமே அரசியல் செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அனைத்துக்கட்சிகளை ஓரணியில் கொண்டு வந்தனர்.

அப்போது இருந்த தேவையை விட இப்போது அது பலமடங்கு அதிகமாகவே இருக்கின்றது!.

**-ஊர்க்குருவி.**

# ஜனாதிபதித் தேர்தலை வைக்காவிடின் ரணிலை வீட்டுக்கு அனுப்ப நாம் தயார்!

## அநுரகுமார எச்சரிக்கை

கொழும்பு, நவ. 21

ஜனாதிபதித் தேர்தலொன்று வைக்காவிடின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வீட்டுக்கு அனுப்ப தயாராக உள்ளோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

“அவருக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன. ஒன்று அரசியலமைப்பின் படி ஜனாதிபதித் தேர்தலை அடுத்தாண்டு செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கு பின்னரும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னரும் நடத்த வேண்டும். ஜனாதிபதி தேர்தலை நடத்த மாட்டோம் என கூறினால் அவரை வீட்டுக்கு அனுப்ப தயாராக உள்ளோம்.

தன்னை மிகவும் சக்தி வாய்ந்த ஜனாதிபதி என்று கூறிய கோட்டாபயவை இந்த நாட்டு மக்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். ஆனால் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்ட போது அதிகாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் திட்டம் எதுவும் இல்லை. அதனால் வேறு வழியின்றி ரணில் ஜனாதிபதியானார்.

அதிகாரத்தை வேறு எவருக்கும் பெற்றுக் கொடுக்க நாம் தயார் இல்லை. மக்களுக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்துடனே ரணிலை வீட்டுக்கு அனுப்புவோம்.” - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆஸி. அணிக்கு ரணில் வாழ்த்து

கொழும்பு, நவ. 21

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட் டியில் ஆஸ்திரேலிய அணியினர் வெற்றி பெற்றமைக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல தலைவர்கள் இந்த வாழ்த்துக்களைக் கூறியுள்ளனர். 2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

(அ)

# இந்த அரசின் வரவு - செலவுத்திட்டம் பெரும்பான்மையுடன் நிறைவேறும்!

கொழும்பு, நவ. 21

மக்கள் மேலும் இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்கிக்கொள்ளும் வரை காத்திருந்த எதிர்க்கட்சிகளின் கனவுகள் இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் சிதைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சட் டத்தரணி பிரேம்நாத் சி.தொலவத்த தெரிவித்தார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவது மாத்திரமன்றி, அந்த நிவாரணங்களை எவ்வாறு வழங்குவது என்பதை எடுத்துக் காட்டிய இம்முறை வரவு - செலவுத் திட் டம், நிச்சயம் அதிக வாக்குகளுடன் நிறைவேற்றப்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி.தொலவத்த இவ்வாறு கூறி னார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி.தொலவத்த, எமது நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, எடுக்கப்பட்ட பிரபல்யமற்ற மற்றும் அரசியல் நோக்கமற்ற தீர்மானங்களினால், தற்போது நாடு ஸ்திரத்தன்மை அடைந்துள்ளது. அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத் துள்ளது.

மேலும் மக்களுக்கு நிவாரணம் கிடைக்காது என எண்ணிய எதிர்க்கட்சிகளின் கனவை சிதைப்பதில் இவ்வருட வரவு செலவு திட்டம் வெற்றி கண்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பதுடன் சிறுநீரக நோயாளர்கள் மற்றும் அங்கவீனருக்கான கொடுப்பனவுகளையும் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும் மலையக மக்களுக்கு முழு காணி உரிமை வழங்குதல், பயன்படுத்தப்படாத காணிகளை விவசாயிகளுக்கு வழங்குதல், உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் போன்ற நீண்ட கால வேலைத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, நவீன உலகிற்குப் பொருத்தமான தொழில் வல்லுநர்களை உருவாக்கும் திட்டங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளால் மாத்திரம் ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. அதற்கு நீண்ட கால வேலைத்திட்டங்கள் தேவை.

இந்த நீண்ட கால வேலைத்திட்டங்களில் 2034ஆம் ஆண்டுக்குள் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துவதும் அடங்குகின்றது. மேலும், இதில் நேரடி வரி களை அதிகரிக்கும் திட்டங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

மக்கள் இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்கிக்கொள்வார்கள் என எதிர்கட்சியினர் எதிர்பார்த்தாலும் நிவாரணங்களை வழங்கு தல் என்பதை விட, எவ்வாறு அந்த நிவாரணங்களை வழங்குவது என்ற விடயமே இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த வருட வரவு - செலவுத்திட்டம் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்படும் என்பதில் சந்தேகமில்லை. தனிப்பட்ட அரசியல் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும் நாட்டின் ஸ்திரத்தன்மைக்காக அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து நாட்டை வெற்றிப்பாதைக்குக் கொண்டு செல்லுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த விடயத்திற்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர்களின் 25 வீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத் தும் சட்டமூலம் அண்மையில் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பெண்களின் பிரதிநிதித்துவம் அவ்வாறே இருக்கும் வகையில் தனிநபர் பிரேரணையாக இந்த முன்மொழிவை சமர்ப்பித்தேன். இது தொடர்பில் எனக்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

கடும் குற்றச்சாட்டுகள் மற்றும் அவதூறுகள் இருந்தபோதிலும், தொடர்ச்சியான அர்ப்பணிப்புகளினால் எம்மால் அதை நிறைவேற்ற முடிந்தது.

ஆனால், இளைஞர்களுக்காக முன்நிற்ப தாகக் கூறும் எதிர்க்கட்சிகள், வரவு - செலவுத் திட்டத்திற்குப் பிறகு அதனைக் கொண்டுவர கடுமையாக முயன்றன. அப் படியானால், அடுத்த ஆண்டு வரை இந்த விடயம் தாமதமாகும். அவர்கள் வரவு- செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கவே விரும்புகிறார்கள் - என்றார்.

(அ)

Eelanadu
21.12.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒரு புதிய மிதவாதத்தின் தேவை

2009இல் யுத்தம் முடிவுற்றபோது, தமிழ் மக்களை வழிநடத்தும் பொறுப்பில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால் தற்போது நிலைமைகள் தலை கீழாகிவிட்டன. தமிழ் மக்களின் நலனை பிரதிநிதித்துவம் செய்வதாக பல கட்சிகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. ஜனநாயகத்தில் நூறு பூக்கள் பூப்பதை தடுக்க முடியாது. அது ஓர் அரசியல் யதார்த்தம் கியூபா போன்ற, சீனா போன்ற, வடகொரியா போன்ற பாசிச நாடுகளில் நூறு பூக்கள் பூப்பதை கற்பனை செய்ய முடியாது. மாற்றுக் கருத்துக்களுக்கான இடமின்மை, அதனை வெளிப்படுத்துவதற்கு வன்மையான எதிர்ப்பு, சில வேளைகளில் உயிரச்சுறுத்தல், சில வேளைகள் மரணம் - இப்படியான சூழ்நிலையை ஓர் அரசியல் கொள்கையாக பேணிப்பாதுகாக்கும் சூழலைத்தான் சிலா் பாசிசம் என்று வரையறுக்கின்றனா். அந்த வரையறை சரியாயின் மேற்படி நாடுகளை, பாசிச நாடுகள் என்றுதானே வரையறுக்க முடியும்.

இப்போது நாம் முன்வைக்கவரும் விடயம் வேறாகும். அதாவது, 2009இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியலானது, தொடர்ந்தும் மெலிந்து கொண்டே செல்கிறது. கூட்டமைப்பின் ஏகபோகம் உடைந்து, அதற்கு மாறாக தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினா்களை பெற்றிருக்கின்றன. சம்பந்தன் அனைவரையும் அரவணைத்து - முன்னோக்கி செல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்கவில்லை. அவ்வாறு வழங்கியிருந்தால், இவ்வாறானதொரு சீரழிவு ஏற்பட்டிருக்காது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், தமிழ் தேசிய அரசியல் தொடா்பில் சிந்திப்பவா்கள் பல கூறுகளாக சிதறியிருக்கும் தமிழா் தரப்புக்களை ஒரு புள்ளியில் சந்திக்கவைக்க வேண்டியிருக்கின்றது.

தமிழ் தேசிய கட்சிகள் ஒரு புள்ளியில் சந்திக்கவில்லையாயின், தமிழ் தேசிய அரசியல் மெல்லச் சாகும் நிலைமை நிச்சயம் ஏற்படும். தமிழ் தேசிய அரசியலையும் புதிதாக வரையறை செய்ய வேண்டியிருக்கின்றது. இதனை நாம் ஒரு புதிய மிதவாதமாக வரையறுக்கின்றோம். இந்த மிதவாத அரசியலானது புனித வாதங்களை மறுதலிப்பதாகவும், இணைக்கக் கூடிய அனைவரையும் இணைத்து - இன்றைய அரசியல் சூழலுக்கு ஏற்ப, அரசியலை மறுசீரமைப்புச் செய்வதாக இருக்க வேண்டும். 2009இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியலில் புனிதவாதம் தேவையற்றது. அதற்கு எந்தப் பெறுமதியும் இல்லை. விடுதலைப் புலிகளின் தோல்வியுடன் புனிதவாதங்களும் காலாவதியாகிவிட்டன. துரோகி, தியாகி என்னும் சொற்களை முன்வைத்து, அரசியல் கட்சிகளை வரையறை செய்யும் போக்கும் காலாவதியாகிவிட்டது.

ஒரு வகையில் இந்தப் போக்கை காலாவதியாக்கும் அரசியலுக்கு பிள்ளையார் சுழியிட்டவா்களும் விடுதலைப் புலிகள்தான். ஏனெனில் தங்களால் ஒரு காலத்தில் தடைசெய்யப்பட்ட, ஆயுதரீதியில் மோதிய - ஏனைய இயக்கங்களையும், தமிழா் விடுதலைக் கூட்டணி - பின்னா் தமிழரசு கட்சி போன்ற மிதவாத பின்புலம் கொண்ட கட்சிகளையும் ஒருங்கிணைத்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பாக தத்தெடுத்துக் கொண்டனா். அதேவேளை தங்களின் தலைவா்களை கொலை செய்த விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக அறிவிப்பதற்கு ஏனைய இயங்கங்களும், மிதவாதிகளும் தயக்கம் காண்பிக்கவும் இல்லை. தமிழ் மக்களின் நலனை வெற்றி கொள்வதற்கான ஒரு வரலாற்று தருணத்தில் நாம் முரண்படக் கூடாது என்னுமடிப்படையில்தான் கடந்த காலத்தை பிரபாகரனும் மறந்தாா், ஏனையவா்களும் மறந்தனா்.

இவ்வாறானதொரு வரலாற்று தருணத்தைத்தான் நாம் தற்போது எதிா்கொண்டிருக்கின்றோம். இந்த தருணத்தில், தங்களின் வரலாற்றுக் கடமையை உணா்ந்து, அனைத்து கட்சிகளும் - பெரிய கட்சிகள் சிறிய கட்சிகள் என்னும் பேதங்களை புறம்தள்ளி - அனைவரும் ஒரு புள்ளியில் சந்திக்க முன்வர வேண்டும். இதனை மறுதலிப்பவா்கள் மக்களை நேசிப்பவா்களாக இருக்கவே முடியாது. மக்கள் அவா்களை மன்னிக்கவும் கூடாது.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**



*“குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்.”*

**- வங்காரி மாதாய்**
**(அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)**

### முறையற்ற வகையில் புற்றுநோய் மருந்து கொள்வனவு:

# 2,000இற்கும் அதிகமானவை நோயாளர்களுக்கு செலுத்தல்

கொழும்பு, நவ. 21

புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் றிரக்ஸிமப் எனும் தடுப்பூசி, மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவு இன்றி இறக்குமதி கடிதம் மூலம் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுத்தேஷ் ஊடகங்களுக்கு கருத்துரைக்ககையில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

போலியான இம்யுனோகுளோபுலின் மருந்தை இறக்குமதி செய்த நிறுவனத்தினால் குறித்த தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டு சுகாதார அமைச்சுக்கு விநியோகிக்கப்பட்டு 2,200 தடுப்பூசிகளில் 2,000 இற்கும் அதிகமானவை நோயாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ரவி குமுத்தேஷ் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, தடுப்பூசி ஒரு குப்பி 152 அமெரிக்க டொலருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், இதற்காக சுகாதார அமைச்சு நூறு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய மருந்துகள் தரமின்றி நோயாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை என சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (அ)

# ஐஸ்டன் இளைஞர் கைது!

கொழும்பு, நவ. 21

தலங்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞராவார்.

தலங்கம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 600 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ரயில் மிதிபலகையில் பயணித்த நால்வர் சுவரில் மோதிக் காயம்!

கொழும்பு, நவ. 21


ரயிலின் மிதிபலகையில் பயணித்துக் கொண்டிருந்த நால்வர் கொழும்பு கொம்பனித் தெரு ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள சுவரில் மோதப்பட்டுக் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

குறித்த ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து பாணந்துறை நோக்கி பயணித்ததாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

காயமடைந்த நால்வரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு






**மேடம்**

கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**இடபம்**

உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மிதுனம்**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**

உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தெளிவு பிறக்கும் நாள்.

**கன்னி**

குடும்பத்தினருடன் சுபவிஷயங்களில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**துலாம்**

புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**

எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வாகனங்களை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**தனுசு**

சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**

குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். திகாரிகள் அலைக்கழிக்கப்படுவார்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**

மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச்செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டும்.

# தமிழக ஆளுநர் ரவி டில்லி பயணம்

சென்னை, நவ. 21

ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று முன் தினம் மாலை டில்லி புறப்பட்டு சென்றார். அங்கு உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் சட்ட நிபுணர்களை அவர் சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது.

தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் பேசி வருவதாக முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். ஆளுநர் ரவி மீது குற்றம்சாட்டி குடியரசுத் தலைவருக்கு முதல்வர் ஸ்டாலின் கடந்த ஜூலையில் கடிதம் எழுதினார். ‘சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் முக்கிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் தாமதம் ஏற்படுத்துகிறார். எனவே, பதவியில் இருந்து நீக்கப்பட தகுதியானவர்’ என்று அதில் முதல்வர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று முன் தினம் மாலை டில்லி புறப்பட்டு சென்றார். உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்திய அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் சட்ட நிபுணர்களை அவர் சந்தித்து ஆலோசிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

# பருவமழை மீண்டும் தீவிரமடைகிறது

சென்னை,நவ. 21

வங்கக்கடல், குமரிக்கடலில் வளிமண்டல சுழற்சி பருவமழை மீண்டும் தீவிரமடைகிறது தமிழகம், புதுச்சேரியில் நேற்று முதல் 4 நாட்கள் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை மீண்டும் தீவிரமடைவதால், தமிழகம், புதுச்சேரியில் வரும் 23ஆம் திகதி வரை கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து தமிழகத்தில் இன்னும் பரவலான மழைப்பொழிவு இல்லை. ஆங்காங்கே ஒருசில இடங்களில் மட்டும் மழை பெய்து வருகிறது. தென்மேற்கு பருவகாலத்தில் மழையை பெறும் தென் மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலையோர மாவட்டங்களில் தான் தற்போதும் மழை பெய்து வருகிறது.

இதற்கிடையே, வங்கக்கடலில் உருவான மிதிலி புயலால், இந்த பருவத்துக்கு மாறாக, காற்று வீசும் திசையில் மாற்றம் ஏற்பட்டது. இதனால் தமிழகத்தில் கடந்த சில நாட்களாக மழை குறைந்தது. வட மாவட்டங்களில் வானம் தெளிவாக உள்ளது. அவ்வப்போது வெயிலும் காணப்படுகிறது.

புயல் தற்போது கரையை கடந்துவிட்ட நிலையில், வடகிழக்கு பருவமழை காலத்துக்கே உரித்தான வகையில் காற்று வீசத் தொடங்கியுள்ளது. வளிமண்டலத்தின் கீழடுக்குகளில் வடகிழக்கு திசையில் இருந்து வீசும் காற்று வலுவடைந்து வருகிறது. இதனால் தமிழகத்தில் மழை வாய்ப்பு அதிகரித்துள்ளது. (அ)

# பல ஆண்டுகளின் பின் சென்னையில் கார் ஓடிய தமிழக முதல்வர் ஸ்டாலின்

சென்னை, நவ. 21

பல ஆண்டுகளுக்குப் பின்னர் சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கார் ஓட்டிச் சென்ற வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் ரயில், விமானத்தில் செல்வதை விட சாலை மார்க்கமாக காரில் பயணம் செய்வதில் அதிக ஆர்வம் கொண்டவர்.

திமுக இளைஞரணியில் இருந்தபோது, ஆரம்பகாலத்தில் தமிழகம் முழுவதும் காரில் பயணித்து, கட்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

குறிப்பாக, அவரே காரை ஓட்டிச் செல்ல விரும்புவார். அரசியலில் முக்கிய இடத்துக்கு வந்த பின்னர், பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக கார் ஓட்டுவதை தவிர்த்தார்.

இந்நிலையில், பல ஆண்டுகளுக்கு பின்னர், நேற்று முன் தினம் தனக்கு மிகவும் பிடித்த, பழைய பியட் பத்மினி காரை சென்னை சாலைகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஓட்டி மகிழ்ந்தார். கடந்த ஒரு வாரமாக காய்ச்சல், தொண்டை வலி, உடல் சோர்வு உள்ளிட்ட பிரச்னைகள் இருந்ததால் வீட்டில் ஓய்வில் இருந்த முதல்வர், அடையாறில் உள்ள பூங்காவில் நடைப் பயிற்சி மேற்கொள்வதற்காக தேனாம்பேட்டையில் உள்ள தனது இல்லத்தில் இருந்து நேற்று முன் தினம் காலை தானே காரை ஓட்டிச் சென்றார். பின்னர், பூங்காவில் நடைப்பயிற்சி மேற்கொண்டார்.

முதல்வர் ஓட்டிய காரில் சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் உட்பட 4 பேர் பயணித்தனர். முதல்வர் ஓட்டிய காருக்குமுன்பும், பின்பும் அவரது பாதுகாப்பு வாகனங்கள் சென்றன. முதல்வர் கார் செலுத்திச் செல்வதை வியப்புடன் பார்த்து ரசித்த பொதுமக்கள், தங்களது செல்போன்களில் புகைப்படம் எடுத்தனர். (அ)

# உதயநிதியை முதல்வர் ஆக்கும் திட்டம் ஒருபோதும் நிறைவேறாது

சென்னை, நவ. 21

உதயநிதியை தமிழக முதல்வராக்கும் திட்டம் ஒருபோதும் நடக்காது என தருமபுரியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசினார்.

தருமபுரி மாவட்ட அதிமுக ஜெயலலிதா பேரவை செயலாளர் எஸ்.ஆர்.வெற்றிவேல் இல்லத் திருமணம் மற்றும் 100 இணையருக்கு இலவச திருமணம் தருமபுரி அடுத்த குண்டலப்பட்டியில் ஸ்ரீரங்கநாதன் ரஞ்சிதம் திருமண மண்டபத்தில் நடந்தது. நிகழ்வில் முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச் செயலாளருமான பழனிசாமி திருமணங்களை நடத்தி வைத்தார்.

பின்னர் அவர் பேசுகையில்-

இதுபோன்ற நிகழ்வுகள் அதிமுகவில் மட்டுமே நிகழும். அதேபோல, அதிமுக சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்ட கட்சி.அதிமுக பாஜக கூட்டணியில் இருந்து பிரிந்து விட்டத்தை தெளிவாக அறிவித்து விட்டோம். இதை பொறுத்துக் கொள்ள முடியாத திமுகவினர் எதையெல் லாமோ பேசி வருகின்றனர். மீண்டும் தெரிவிக்கிறேன், அதிமுகவுக்கும், பாஜகவுக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஆனால், திமுக தலைவர் ஸ்டாலின் மற்றும் அந்த கட்சியினர் தவறான பிரசாரத்தை செய்து வருகின்றனர். சிறுபான்மையினர் வாக்குகளை ஏமாற்றி பெற்று வந்த திமுகவுக்கு இனி முழுமையாக அந்த வாக்குகள் கிடைக்காது என்ற அச்சம் வந்து விட்டது.

மன்னராட்சி முறையைப் போல, திமுக கட்சியினர் குடும்ப ஆட்சி நடத்தி வருகின்றனர். கருணாநிதிக்கு பின்னர் ஸ்டாலின். தற்போது ஸ்டாலினுக்கு பின்னர் உதயநிதியை முதலமைச்சராக்க திட்டமிட்டு வருகின்றனர். ஒருபோதும் இது நடக்காது. திமுகவில் கட்சி முன்னோடிகளுக்கும், முன்னாள் அமைச்சர்களுக்கும் வாய்ப்பில்லை. அடுத்த தேர்தல் எப்போது வந்தாலும் அதிமுக தான் வெற்றி பெறும்- என்றார். (அ)

# இலங்கையுடனான பங்களிப்பை அமெரிக்கா தொடர்ந்தும் மதிக்கும்

## ரணிலிடம் கூறினார் சமந்தா பவர்

மலே, நவ. 21

**இலங்கையுடனான பங்காளிப்பை அமெரிக்கா தொடர்ந்தும் மதிப்பதாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரத்தின் நிர்வாகி சமந்தா பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.**

மாலைதீவின் புதிய ஜனாதிபதி மொஹமட் முய்ஸு பதவியேற்பு நிகழ்விற்காக மாலைதீவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் அரசியல் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை இதன்போது வலியுறுத்தியதாக சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் இலங்கையின் துறைமுக உள்கட்டமைப்பில் அண்மையில் 550 மில்லியன் முதலீடு செய்தது.



இந்த விடயத்தை சுட்டிக் காட்டிய சமந்தா பவர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்தின் நிலைப்பாடு இதில் வெளிக்காட்டப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்கள் தவறு இழைத்தால் தண்டனை!

## வருகின்றது புதிய சட்டம்



கொழும்பு, நவ. 21

தவறிழைக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தண்டனையளிப்பதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் வரையப்பட்டுள்ள புதிய சட்டமூலமொன்று அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் அவர் இதனை கூறினார்.

இதனூடாக, தமது பதவியின் கௌரவத்தைப் பாதுகாக்க தவறுகின்ற மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற தர நிர்ணய சட்டமூலம் என்ற பெயரிலான குறித்த சட்டமூலம், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன்படி, தவறிழைக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுயாதீனமான குழுவொன்றின் ஊடாக தண்டனை விதிப்பதற்கு குறித்த சட்டமூலத்தின் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்யும் வகையிலான ஏற்பாடுகளும் குறித்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (அ)

# பாராளுமன்ற குழுக் கூட்டங்களின்போது வெளியார் பங்கேற்க அனுமதி அவசியம்!

## சபையில் அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, நவ. 21

பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் வெளியாட்கள் கலந்து கொள்ள வேண்டுமானால் சபாநாயகரின் அனுமதியை பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கூட்டத்தொடரை நேற்று ஆரம்பித்து வரைத்து உரையாற்றும்போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனை தெரிவித்தார்.

குழுவின் உறுப்பினர்கள் அல்லது குழு உறுப்பினர்களாக இல்லாத ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர, குழுவின் தலைவர் மற்றும் வெளி நிறுவன அதிகாரிகளின் முறையான அனுமதியுடன் கூட்டத்தில் பங்கேற்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவின் மகன் கனிஷ்க பண்டார கோப் கூட்டத்தில் பங்குபற்றியமை தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என கடந்த வாரம் சபாநாயகர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுவர்கள் சம்பந்தப்பட்ட 5,000 குற்றச்செயல் பதிவு!

கொழும்பு, நவ. 21

இலங்கையில் வருடாந்தம் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட சுமார் 5,000 குற்றச்செயல்கள் பதிவாகுவதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனை மற்றும் செல்போன் பாவனையே இவ்வாறான பல குற்றச் செயல்களுக்கு வழிவகுத்துள்ளதாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் வருடாந்தம் சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் சுமார் 5,000 பதிவாவதாக இந்த புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

எமது நாட்டில் பாரிய பிரச்னையாக மாறியுள்ள போதைப் பொருள் பிரச்னையே.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றுமொரு மிகப்பெரிய காரணி. இலங்கையில் மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் பதிவாகும் சிறுவர்கள் தொடர்பான குற்றங்கள் பற்றி எங்களுக்குத் தெரியும்.

கையடக்கத் தொலைபேசிகள் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு இட்டுச் செல்லும் ஆபத்தான ஆயுதமாக மாறியுள்ளது. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைக்க நாம் முயற்சி எடுத்தால், பெற்றோர்கள் கண்டிப்பாக வீட்டில் கையடக்கத் தொலைபேசி பாவனையை கட்டுப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# சுகாதார அமைச்சின் புதிய செயலாளர் நேற்று கடமைகளை பொறுப்பேற்றார்!

கொழும்பு, நவ. 21

சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால நேற்றுக் காலை தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் முன்னதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியதோடு சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய ஜனகஸ்ரீ சந்திரகுப்த ஓய்வுபெற்றுள்ள நிலையில் விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால கடந்த 17ஆம் திகதி புதிய செயலாளராக நியமிக்கப்பட்டார்.



# கிளிநொச்சியில் மரம் வீழ்ந்து இரண்டு கடைகளுக்கு சேதம்!

கிளிநொச்சி, நவ. 21

கிளிநொச்சி நகரத்தின் நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் பாரிய வேப்பமரம் ஒன்று பாறி விழுந்ததில் வர்த்தக நிலையம் ஒன்று உட்பட இரண்டு கடைகள் சேதமடைந்துள்ளதுடன், கடையில் உறங்கிக் கொண்டிருந்தவர் காயங்களுக்கு உள்ளாகி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

ஏ-09 வீதியில் புனித திரேசம்மாள் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வர்த்தக நிலையத்துக்கு அருகில் நின்ற பாரிய வேப்பமரம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விழுந்துள்ளது.

இதன்போது, கடையில் உறங்கிக் கொண்டிருந்தவர் சிறு காயங்களுக்கு உள்ளாகி தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன் கடையின் கூரைகள் சேதமடைந்துள்ளது. (அ)

# நவாலியில் சைக்கிளில் பயணித்த முதியவர் மயங்கி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் - நவாலி பகுதியில் நேற்று சைக்கிளில் சென்ற முதியவர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 70 வயதான அருளப்பு விமலதாஸ் என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம் அருகில் உள்ள வீதியில் நேற்று திங்கட்கிழமை காலை முதியவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அமைச்சரின் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறது கிரிக்கெட் சபை

கொழும்பு, நவ. 21

சர்வதேச கிரிக்கட் பேரவையினால் இலங்கை கிரிக்கெட்டுக்கு விதிக்கப்பட்ட தடை குறித்து அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று முன் தினம் வெளியிட்ட அறிக்கைகள் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை நேற்று தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் முன்வைக்கப்பட்ட ஆதாரமற்ற மற்றும் தீங்கிழைக்கும் குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிராகரிப்பதாகவும் குறித்த தடையை விரைவில் நீக்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (அ)

# அநுரவுக்கு பெருகும் நாட்டு மக்கள் ஆதரவு

## கருத்துக் கணிப்பில் தகவல் என்கிறார் ரில்வின்

கொழும்பு, நவ. 21

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அதிக வாக்குகளைப் பெறுவார் என கருத்துக் கணிப்பொன்றில் நிரூபனமாகியுள்தாக தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



ஜே.வி.பியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் முன்னணி நிறுவனமொன்று நடத்திய முதற் கட்ட கருத்துக் கணிப்பில் தேசிய மக்கள் சக்திக்கு 42 வீதமான மக்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

இரண்டாம் கட்ட கருத்துக் கணிப்பில் 46 வீதமான மக்கள் ஆதரவளித்திருந்தனர். இந்நிலையில், அண்மையில் நடைபெற்ற மூன்றாம் கட்ட கருத்துக்கணிப்பில் 50 வீதமான மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பின்படி, அரசுக்கான ஆதரவு 9 வீதமாக உள்ளது- என்றார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து தேசிய மக்கள் சக்தி பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்துவருகிறது.

அதன் ஒருகட்டமாக உலகளாவிய ரீதியில் உள்ள இலங்கை மக்களின் ஆதரவை பெறும் நோக்கில் அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பல்வேறுகட்ட சந்திப்புகளை நடத்தி வருகிறார்.

அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட அநுரகுமார திஸாநாயக்க அங்கு பல்வேறு சந்திப்புகளில் ஈடுபட்டார்.

அதேபோன்று இலங்கை மக்கள் அதிகமாக வாழும் இத்தாலிக்கும் அநுரகுமார திஸாநாயக்க விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இங்கு அவருக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# டெங்கு தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு கிராம மட்ட குழுக்களை வலுப்படுத்துங்கள்!

## யாழ்.அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 21

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை செயற்படுத்த கிராமமட்ட குழுக்களை வலுப்படுத்துங்கள் என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாதசுந்தரம் தெரிவித்தார்

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட சுகாதார மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டெங்கு தொற்றினை கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் முதலில் நுளம்புகள் பெருகும் இடங்களை இல்லாதொழிக்க வேண்டும். மிக முக்கியமாக கிராமமட்ட குழுக்களை பயன்படுத்தி இனம் காணப்பட்ட பிரதேசங்களுக்குள் தொடர்ச்சியாக கழிவுகளை அதாவது தண்ணீர் தேங்க கூடிய கழிவுகளை அகற்ற நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும். இதற்கான நடவடிக்கையினை பிரதேச செயலர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக கிராமமட்ட குழுக்களை விரிவாக செயற்படுத்துவதன் மூலம் டெங்கு தொற்று கட்டுப்படுத்த முடியும். எந்த அளவிற்கு கிராம மட்ட குழுக்களின் செயற்பாடுகளை நாங்கள் விரிவுபடுத்துகின்றோமோ அந்த அளவிற்கு டெங்கு போன்ற நோய்களை கட்டுப்படுத்த முடியும். கிராம மட்டங்களில் கிராம மட்ட குழுக்களை வலுவாக செயற்படுத்துவதன் மூலமே இதனை சாதிக்க முடியும்.

டெங்கு ஒழிப்பு வேலை திட்டங்களில் திணைக்களங்கள் மீது குற்றங்களை சாட்டிக் கொண்டிருக்காது அதற்கு பதிலாக எதனை செய்ய முடியும் என சிந்தித்து செயல்படுவது நல்லது.

குறிப்பாக தற்பொழுது பொருளாதார நெருக்கடி நிலைமையில் சிலவற்றை உடனடியாக செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே அதற்கு பதில் வீடாக செய்ய வேலை திட்டங்களை உடனடியாக செய்ய வேண்டும்-என்றார்.

(அ)

# நாடு வங்குரோத்தாகியுள்ளதெனில் அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பியும் பொறுப்பு!

## கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, நவ. 21

வரிச்சலுகையால் நாடு வங்குரோத்தாகிவிட்டது என குற்றம் சாட்டப்பட்டால், அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி பங்காளிப்பு செய்துள்ளதாக பொதுஜன பெரமுனாவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்படி, வரி குறைக்கப்பட்ட போது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன எதிர்ப்பு இன்றி ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றமைக்கான பொறுப்பை அப்போதைய நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஏற்க வேண்டும் என நாமல் வலியுறுத்தியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7 வீதமாக காணப்பட்ட நிலையில், 2020 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 2 வீதமாக குறைவடைந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 2019 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் தனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வரிகளை குறைப்பதாக உறுதியளித்ததுடன், வழங்கிய ஆணைக்கு அமைய செயற்பட்டு வரிகளை குறைப்பது எவ்வாறு பிழையானது எனவும் நாமல் நாமல் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், வரவு - செலவுத் திட்டத்தை விமர்சிப்பதன் மூலம் சிலர் புண்பட்டுள்ளதாகவும், எந்தவொரு அரசாங்கத்திலும் தவறு இருப்பின், அந்த தவறை மக்களுக்காக சுட்டிக் காட்ட தயங்க மாட்டோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின் போது மேற்கொள்ளப்பட்ட சேதன உரப் பாவனை போன்ற தவறான தீர்மானங்கள் குறித்து மௌனம் காத்ததன் விளைவாக இன்று இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், அதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டதாகவும் நாமல் தெரிவித்துள்ளார்.

எனவே, வரவு - செலவுத் திட்டம் மாத்திரமன்றி எந்தவொரு அரசாங்கத்தின் தவறுகளையும் விமர்சிக்கவும் சுட்டிக் காட்டவும் தயங்குவதில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் தெரிவித்துள்ளார்.

### அரச அதிகாரிகளின் அலட்சியப்போக்கால்

# அரச வேலைக்கு உள்வாங்கப்படாத 465 பட்டதாரிகள் நேற்று போராட்டம்

கொழும்பு, நவ. 21

அரச அதிகாரிகளின் அலட்சிய போக்கினால் பட்டதாரிகளுக்கான ஆட்சேர்ப்பு வேலைத் திட்டத்தில் உள்வாங்கப்படாத 465 பட்டதாரிகள் இன்று பாராளுமன்ற வளாகத்திற்கு அண்மித்த வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



இந்நிலையில், குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களை நேரில் சென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

பல சந்தர்ப்பங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட 60,000 பட்டதாரிகளுக்கான ஆட்சேர்ப்பு வேலைத்திட்டத்தில் அரச அதிகாரிகளினால் விடபட்ட தவறுகள் மற்றும் குறைபாடுகளினால் 465 பட்டதாரிகள் வேலையிழந்து பல வருடங்கள் கடந்துள்ளன.

இது தொடர்பில் தான் தொடர்ந்து பாராளுமன்றத்திலும், அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களிலும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் தெரியப்படுத்தினேன்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரும் இந்த பிரச்னையை முடிவுக்கொண்டு வருவதாக அறிவித்துள்ள போதிலும், இது வரையில் தீர்வு காணப்படவில்லை.

ஒரு சில அதிகாரிகளின் அலட்சியத்தால் நிகழ்ந்த காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இன்று இந்த பட்டதாரிகள் வேலை இழந்துள்ளனர்.

பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் அவர்களின் வாழ்க்கையை அழிக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இது கீழ்த்தரமானதும் நியாயமற்றதுமான செயலாகும். இதன் காரணமாக அவர்களின் மனித உரிமை மீறப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை இன்று (நேற்று) பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தேன். மீண்டும் இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றிற்கு அறியப்படுத்துவேன்-என்றார்.

(அ)

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மின் பிறப்பாக்கி இயக்கம் தாமதமாகும்

கொழும்பு, நவ. 21

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இரண்டாவது மின் பிறப்பாக்கி இயந்திரத்தை இயக்குவதற்கு மேலும் இரண்டு வாரங்கள் ஆகும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, மின் பிறப்பாக்கி இயந்திரம் தற்போது பழுது பார்க்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பராமரிப்பு பணிகளுக்காக நிறுத்தப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கியை கணினியில் இணைப்பதற்கு மேலும் இரண்டு வாரங்கள் ஆகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது மின் பிறப்பாக்கியின் பராமரிப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில், குறித்த இயந்திரம் மீண்டும் பழுதடைந்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த நிலைமை காரணமாக மின்சார விநியோகத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# அஸ்வெசும ௨ஆம் கட்டத்துக்கு ஒரே அளவுகோலாக வறுமை!

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து



**கொழும்பு, நவ. 21**

**ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகவுள்ள அஸ்வெசும வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கு ஒரே அளவுகோலாக, வறுமை கருதப்படவேண்டும் எனவும், வறுமையை கணிப்பிடுவதற்கு குறைந்த அளவுகோல்கள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற வழி வகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

அஸ்வெசும முதலக்கட்டம் தோல்வியடைவதற்கு காரணம், அதற்காக எடுத்துக்கொள்ளப்பட அளவுகோல்கள் அதிகமானதாக இருந்தமை மற்றும் அந்த அளவுகோல்களுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை ஆகியன இருந்ததாக குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

அஸ்வெசும சமூக நலன்புரி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பில் கண்டறிவதற்கு நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு கூடிய போதே குழுவின் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், வறுமையை அளவிடுவதற்கு மின்சாரக் கட்டணத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்திய குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, மின்சார அலகுகள் 30 இற்கு குறைவான மின்சாரப்பாவனை எனும் அளவுருவை இதற்குப் பயன்படுத்த முடியும் என்றும், இலங்கை மின்சார சபையுடன் இணைந்து அந்த அளவுருவைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

அத்துடன், மின்சாரக் கட்டணம் எனும் அளவுருவுக்கு 60 வீதத்தையும், வறுமையை மதிப்பிடுவதற்கு பயன்படும் ஏனைய அளவுருக்களுக்கு 40 வீதத்தையும் கவனம் செலுத்துமாறு நலன்புரி நன்மைகள் சபைக்கு ஆலோசனை வழங்கினார்.

நலன்புரி நன்மைகளை மூன்று மடங்கு அதிகரித்தாலும், அரசாங்கத்துக்கோ நலன்புரி நன்மைகள் சபைக்கோ மக்களின் வரவேற்பு இல்லாமைக்குக் காரணம் பயனாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் இடம்பெற்ற பலவீனங்கள் எனச் சுட்டிக்காட்டிய குழுவின் தலைவர், ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்குப் பொருத்தமான அளவுகோல்கள், கல்வி கற்று வேலையில்லாமல் இருக்கும் 20 வீதத்துக்கும் அதிகமானவர்கள் உள்ள இலங்கைக்குப் பொருத்தமானது இல்லை என வலியுறுத்தினார்.

2023 ஜூலை மாதத்தில் 1,367,524 அஸ்வெசும பயனாளிகளுக்கு 8,525,999,000 ரூபாய் நிதியும், ஆகஸ்ட் மாதத்தில் 1,365,076 பயனாளிகளுக்கு 8,496,698,750 ரூபாய் நிதி செலுத்தப்பட்டுள்ளதாக இதன்போது புலப்பட்டது.

2024 வரவுசெலவுத்திட்டத்தில் அஸ்வெசும வேலைத்திட்டத்துக்கு 180.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய இரண்டு மில்லியன் பேருக்கு இந்த நலன்புரியை வழங்கமுடியும் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அஸ்வெசும தொடர்பில் மேன்முறையீடு 1,000,000 கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அதில் இதுவரை 200,000 மாத்திரம் முடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அவற்றில் 119,794 அளவு வேலைத்திட்டத்துக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 4655 அளவான மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளன.

அஸ்வெசும மற்றும் சமுர்த்தி பயனாளிகள் தற்பொழுது 18 இலட்சம் பேர் உள்ளதாகவும், அவற்றில் 395,000 சமுர்த்திப் பயனாளிகள் அஸ்வெசும வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என்றும் இதன்போது புலப்பட்டதுடன், அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய டிசம்பர் மாதம் வரை இந்த அனைவரும் நலன்புரி நன்மைகளைப் பெறுவதாக இதன்போது புலப்பட்டது.

அவர்களுக்கும் இதுவரை அஸ்வெசும வேலைத்திட்டத்துக்கு விண்ணப்பிக்காத சமுர்த்தி பயனாளிகள் ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகும் அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என நலன்புரி நன்மைகள் சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் முறைமைக்கு கிராமிய மட்டத்திலான விசேட அதிகாரிகள் தேவைப்படுவதுடன், அதற்குப் பிரத்தியேகமான அதிகாரியொருவர் இருப்பது அத்தியாவசியம் என நலன்புரி நன்மைகள் சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிராம உத்தியோகத்தர்களின் சேவை யாப்பு தொடர்பான சிக்கலை பொது நிர்வாக அமைச்சின் ஒருங்கிணைப்பில் தீர்த்து மேன்முறையீட்டு செயன்முறையில் அவர்களையும் சேர்த்துக்கொள்வதன் முக்கியத்துவத்தை குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான அசோக் அபேசிங்க, கௌரவ் பி.வை.ஜீ. ரத்னசேகர, சஞ்சீவ எதிரிமான்ன, எஸ்.எம்.எம். முஷாரப் மற்றும் லலித் எல்லாவல ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# நாட்டிலுள்ள 220 இலட்சம் மக்களின் விளையாட்டு உரிமை மீறப்பட்டது!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



*கொழும்பு, நவ. 21*

இலங்கை கிரிக்கெட் சபையின் உறுப்புரிமையை நீக்குமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை 220 இலட்சம் மக்களினதும் விளையாட்டு உரிமையை மீறும் செயலாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபையினால் சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 3 கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள விசேட காணொளியூடான அறிவிப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை கிரிக்கெட் சபையினால் சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 3 கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவறானவையாகும்.

உலகக் கிண்ண இறுதிப் போட்டி நடைபெறும் தினத்தில் கிரிக்கெட்டை நேசிக்கும் இந்நாட்டு மக்களுக்கு புதிய விடயங்களை தெரியப்படுத்தியிருக்கின்றேன்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் கடந்த 6,7 மற்றும் 9ஆம் திகதிகளில் 3 கடிதங்களை சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு அனுப்பி வைத்துள்ளது. இக்கடிதங்களை வாசிக்கும் போது இலங்கையில் கிரிக்கெட் எவ்வாறு தடை செய்யப்பட்டது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

நவம்பர் 6 ஆம் திகதி எழுதிய கடிதத்தில் இடைக்காலக் குழுவை விமர்சித்துள்ளதுடன், அரசியல் ரீதியான தலையீடுகள் இடம்பெறுவதாகவும், அமைச்சருக்கு அழுத்தம் கொடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இரண்டாவது கடிதத்தின் மூலம் இடைக்காலக் குழு விளையாட்டுச் சட்டத்தை மீறியுள்ளதாகவும், இது சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சட்டத்திற்கு முரணானது என்றும் இடைக்கால குழுவொன்றை நியமித்தால் கிரிக்கெட்டை தடை செய்ய நேரிடும் என்று கூறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணம் 2024, ஐ.சி.சி சர்வதேச மாநாடு, டி20 போட்டி போன்றவற்றை பிற நாடுகளுக்கு மாற்ற வேண்டும் என அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கடிதத்தின் மூலம் விளையாட்டுத்துறை அமைச்சரின் முயற்சியாலையே பாராளுமன்ற விவாதம் நடந்ததாகவும், கிரிக்கெட் உறுப்பினர்கள் நீக்கப்பட்டு அதன் சுதந்திரம்
பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கிரிக்கெட் சட்டத்தை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், இது ஐ.சி.சி. சட்டத்துக்கு முரணானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு கிடைக்கும் வருமானத்தில் 20 வீதத்தை விளையாட்டுத்துறை அமைச்சு கேட்பதாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதங்களில் உள்ள உள்ளடக்க தகவல்கள் தவறானவையாகும். இதில் அரசியல் ரீதியான தலையீடுகள் எதுவும் இடம்பெறவில்லை.

அதே நேரம் இது நட்புவட்டார விளையாட்டு அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இது 220 இலட்சம் மக்களினதும் விளையாட்டு உரிமையை மீறும் செயலாகும்- என்றார்.

(அ)

# யாழில் வரலாற்றுச் சாதனை படைத்த மாணவி கௌரவிப்பு



*யாழ்ப்பாணம், நவ. 21*

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி ஜெரால்ட் அமல்ராஜ் வனிஷ்கா 196 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்றார்.

குறித்த மாணவியை கௌரவிக்கும் நிகழ்வானது மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கிளையினரால் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் மற்றும் யாழ் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# சிவனொளி பாதமலையில் கழிவுகளை அகற்ற வருடாந்தம் 2 மில்லியன் செலவு

*கொழும்பு, நவ. 21*

சிவனொளி பாத மலையை வழிபட வரும் பக்தர்களால் எரியப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு அரசாங்கம் வருடாந்தம் பெருமளவு பணம் செலவழிப்பதாகவும், நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் மட்டும் 2 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பணம் செலவிடப்படுவதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான சிவனொளி பாதமலை யாத்திரை காலம் டிசெம்பர் 26 ஆம் திகதி போயா அன்று ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், பக்தர்கள் அனைவரும் பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்ற கழிவுகளை எடுத்துச் செல்லாமல் சிவனொளி பாதமலையை தரிசிக்குமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி மாவட்ட செயலகம் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் பக்தர்களுக்கு தேவையான வீதிகள், நீர், மின்சாரம் மற்றும் ஏனைய பொது வசதிகள் எதிர்வரும் நாட்களில் அபிவிருத்தி செய்யப்படும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஞாயிற்றுக்கிழமையும் பாராளுமன்றம் கூடும்



*கொழும்பு, நவ. 21*

பெறுமதி சேர் வரி திருத்தம் மற்றும் பணச் சட்டமூலங்கள் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது.

அதன்படி அடுத்த மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு நேற்று தீர்மானித்துள்ளது. (அ)

# பிரதேச சபையின் அசமந்தப்போக்கினால் இரவில் ஆபத்தான பிரதேசமாக மாறிவரும் மாவடிப்பள்ளி

அம்பாறை, நவ. 21

**அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காரைதீவு- அம்பாறை பிரதான வீதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு காரைதீவு பிரதேச சபை நிர்வாகத்தின் கீழுள்ள தெருவிளக்குகள் பிந்திய இரவுகளில் மின்துடிப்பை மேற்கொள்வதால் இருள் சூழ்ந்து பொதுமக்களும், பாதசாரிகளும் வீதியில் அச்சமின்றி பயணிக்க முடியாது பலத்த அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.**

இது தொடர்பில் பல தடவைகள் ஊடகங்களின் வாயிலாக செய்திகள் வழங்கப்பட்டிருந்தபோது நடவடிக்கை எடுக்கப் போவதாக கூறி நிரந்தர ஆக்கபூர்வமான எவ்வித செயற்பாடுகளையும் காரைதீவு பிரதேச சபை மேற்கொள்ளாத நிலையில் தொடர்ந்தும் யானைகளின் நடமாட்டம், முதலைகளின் கரையொதுங்குதல், கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் என மாவடிப்பள்ளி பிரதேசம் இரவில் பயணிக்க முடியாதவாறு ஆபத்தான பிரதேசமாக காட்சியளிக்கிறது.

அது மாத்திரமின்றி இருள் சூழ்ந்துள்ளமையால் குறித்த பிரதேசத்தில் பல சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெற வாய்ப்புள்ளதாக மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர். ஆகவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், காரைதீவு பிரதேச சபை நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

காரைதீவு பிரதேச சபைக் குட்பட்ட காரைதீவு, மாவடிப் பள்ளி பிரதான வீதியின் ஒரு பகுதி தெரு மின் விளக்குகள் அதாவது மாவடிப்பள்ளி பெரிய பாலம் தொடக்கம் மாவடிப் பள்ளி வரை எரியாமல் உள்ளது. ஆனால் காரைதீவு பிரதேசத்தில் மின் விளக்குகள் எரிகிறது. இது எவ்வகையான திட்டம் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மாவடிப்பள்ளி பிரதேச மின் விளக்குகளை மீள எரியச் செய்வதற்கான எந்த நடவடிக்கைகளும் காரைதீவு பிரதேச சபையால் இதுவரை மேற் கொள்ளாமல் இருப்பதை இட்டு மாவடிப்பள்ளி மக்கள் ஆதங்கப்பட்டு கொண்டு இருக்கிறார்கள்.

இதனை கருத்திற் கொண்டு காரைதீவு பிரதேச சபை உட்பட உரிய அரச நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவடிப்பள்ளி மக்கள் மற்றும் பொது மக்கள் சார்பாக அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா, மாவடிப்பள்ளி மொழிச் அபிவிருத்தி மற்றும் சகவாழ்வுச் சங்கம் போன்ற பல்வேறு அமைப்புக்கள் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# மூதூர் லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்




திருமலை, நவ. 21

திருகோணமலை மாவட்ட, மூதூர் கல்வி வலயத்தில் உள்ள லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அதிகஸ்ட குடும்பத்தினை சேர்ந்த மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள், பாதணி மற்றும் புத்தகப்பை வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தாமோதரம்பிள்ளை சதீஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜருபன், சி.காந்தன் ஆகியயோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், பாதணி மற்றும் புத்தகப்பை என்பனவற்றை வழங்கினர்.

இந்நிகழ்வில் மூதூர் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். முசம்மில், ஆசிரிய ஆலோசகர் என்.எம். கலிலூர்ரகுமான், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# தேசிய மட்ட தமிழ்மொழித்தின போட்டியில் திருகோணமலை மாணவர்கள் பிரகாசிப்பு







திருமலை, நவ. 21

தேசிய மட்ட அகில இலங்கை தமிழ்மொழித்தின கர்நாடக சங்கீத போட்டியில் திருகோணமலை விபுலானந்த கல்லூரி மாணவி செல்வி.அ. தனேஜா வயலின் தனி இசையில் முதலாம் இடத்தையும், மூதூர் கிளிவெட்டி மகா வித்தியாலய மாணவன் செல்வன் க.கபிலாஷ் வயலின் தனி இசை நிகழ்ச்சியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தினையும், திருகோணமலை, சாம்பல்த்தீவு தமிழ் மகா வித்தியாலய மாணவிகள் கவன் நடனத்தில் அகில இலங்கை ரீதியாக 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

(அ)

# ஆயுள்வேத மத்திய மருந்தகத்தை மக்களின் பாவனைக்கு கையளித்தார் ஆளுநர் செந்தில்



மட்டக்களப்பு, நவ. 21

கிழக்கு மாகாண நிதியின் கீழ் 14.5 மில்லியன் ரூபாவில் சம்மாந்துறை - மல்வத்தையில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுள்வேத மத்திய மருந்தகத்தை

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்து மக்கள் பாவனைக்கும் கையளித்து வைத்தார்.

ஆயுள்வேத வைத்தியசாலைகளின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ. நபீல் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள்,

சம்மாந்துறை பிரதேச செயலக உதவிச் செயலாளர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கல்முனை பிராந்திய ஆயுள்வேத வைத்தியசாலைகளின் வைத்திய பொறுப்பதிகாரிகள், வைத்தியர்கள் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

மேலும், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பிரதேச மக்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

(அ)

# சிங்கள பாடநெறி இறுதி நாள் நிகழ்வும் பாரம்பரிய உணவு முறை கண்காட்சியும்



காரைதீவு, நவ. 21

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அரச உத்தியோகத்தர்களுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பாடநெறியின் இறுதி நாள் நிகழ்வும் சிங்கள பாரம்பரிய உணவு முறை சார்ந்த கண்காட்சியும் கல்முனை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வானது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் மிக சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஜெ. மதன், வைத்திய சாலை கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி, வைத்தியசாலை தாதிய பரிபாலகர் .என். சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி. எல். சுஜேந்திரன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் . தோமஸ் தேவ அருள், பிரதான சுகாதார முகாமைத்துவ உதவியாளர் திருமதி. எஸ். சுகுமார், சுகாதார உதவியாளர்களின் மேற்பார்வையாளர் எஸ். ஜெயகுணம், வளவாளர்களான திருமதி. பி. சந்திரகுமாரி, திருமதி. எம். பி. ஆமினா, தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் சிங்கள பயிற்சி பெற்ற அரச ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் நிகழ்வில் பயிற்சி பெற்ற ஊழியர்களின் கலை கலாச்சார நிகழ்வுகள் நடைபெற்றதுடன் சிங்கள பாரம்பரிய உணவு முறை சார்ந்த கண்காட்சியும் நடைபெற்றது.

(அ)

# நீண்ட தூரம் பாயும் அணு ஏவுகணை பிரெஞ்சு இராணுவம் பரிசோதித்தது!

## தென்மேற்கு விண்ணில் தோன்றிய ஒளிப் பிழம்பு

பாரிஸ், நவ. 21

**நாட்டின் தென்மேற்குப் பிராந்திய வான் பரப்பில் நேற்றுச் சனிக்கிழமை முன்னிரவு பெரும் வெடிப்பொலியைத் தொடர்ந்து திடீரெனத் தோன்றிய நீண்ட ஒளிக் கற்றை விண் கல்லினாலோ அல்லது வேறு எந்த வானியல் நிகழ்வுகளினாலோ உருவானது அல்ல என்றும் -**

**பிரெஞ்சு இராணுவம் நடத்திய அணு ஏவுகணைப் பரிசோதனையே அவ்வாறு விண் ணில் நீண்ட ஒளிப் பிழம்பைத் தோற்றுவித்தது என்றும் -**

**அறிவிக்கப்படுகிறது.**

அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் எம் 51.3 நீண்ட தூர பாலிஸ்டிக் ஏவுகணைச் சோத னையே நேற்று முன் தினம் வெற் றிகரமாக நடத்தப்பட்டிருக்கி றது.

பிரான்ஸின் தென் மேற்கே அமைந்துள்ள பிஸ்கரோஸ் ஏவு கணைப் பரிசோதனைத் தளத் தில் இருந்து வட அத்திலாந்திக் ஆழ்கடல் நோக்கி ஏவப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணை வெற்றிக ரமாக அதன் இலக்கைத் தொட் டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அணுத் தலைகள் பொருத் தப்படாமல் நடத்தப்பட்ட அந்த முதலாவது பாலிஸ்டிக் ஏவுக ணைப் பரிசோதனை வெற்றிகர மாக நிறைவேறியது என்ற செய் தியைப் பிரான்ஸின் பாதுகாப்பு அமைச்சர் செபாஸ்டியன் லுகோர்னு சுமார் ஒரு மணி நேரம் கடந்து தனது ஓ சமூகவ லைத் தளப் பக்கத்தில் படத்து டன் வெளியிட்டார். சோதனை நடத்தப்பட்ட தகவல் அதன் பின்னரே நாட்டுக்குத் தெரிய வந்தது.

வரவிருக்கும் தசாப்தங்களில் பிரான்ஸின் கடல்சார் பாதுகாப் புப் பலத்தின் நீடித்த நம்பகத் தன்மைக்குப் பங்களிக்கவுள்ள ஏவுகணையின் முக்கிய முன் னேற்றத்தை உறுதிப்படுத்த இந்



தச் சோதனை உதவியுள்ளது -" என்று பாதுகாப்பு அமைச்சு ஞாயிற்றுக்கிழமை விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சர்வதேச சூழலைக் கருத்தில் கொண்டு, பிரான்ஸின் அணு ஆயுதங்களின் செயல்பாட்டுத் திறனின் நம்பகத்தன்மையைப் பேணுவது அவசியம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது .

முன்னறிவிப்பு ஏதுமின்றி நடத்தப்பட்ட இந்த அணு ஏவு கணைப் பரிசோதனை வான் பரப்பில் உருவாக்கிய பெரும் ஒளிப் பிழம்பு தென்மேற்குப் பிராந்தியத்தின் பல பகுதிகளி லும் மக்களைப் பெரும் வியப் பில் ஆழ்த்தியது. பெரு வெளிச் சத்துடன் தோன்றிய நீண்ட ஒளி யின் மூலம் என்ன என்பது தெரி யாது குழப்பமடைந்தவர்கள் சமூக ஊடகங்களில் அதுபற்றி வினவத் தொடங்கினர். வீடி யோக்களும் பரவின.

இஸ்ரேல் - ஹமாஸ் போரு டன் தொடர்பு படுத்தியும் இணையத்தில் தகவல்கள் பதி விடப்பட்டன.

வானில் ஏவுகணை ஏற்படுத் திய பெரு வெளிச்சம் இத்தாலி, ஸ்பெயின் நாடுகளிலும் தென் பட்டதாகச் செய்திகள் வெளியா கியுள்ளன. (அ)



# அவுஸ்திரேலிய கப்பல் மாலுமிகள் மீது சீன போர்க்கப்பல் சோனார் தாக்குதல்!

கான்பரா, நவ. 21

ஜப்பான் கடற்பரப்பில் அவுஸ்திரேலிய கப்பலின் மாலு மிகள் மீது சீனாவின் போர்க்கப் பல் சோனார் தாக்குதல் நடத்தி யுள்ளதாக குற்றம் சாட்டப்பட் டுள்ளது.

சோனார் கதிர்களை பயன்ப டுத்தி அவுஸ்திரேலிய கடற் படை வீரர்களுக்கு சீனா சிறிய காயங்களை ஏற்படுத்தியது என அவுஸ்திரேலியா குற்றம்சாட்டி யுள்ளது.

தங்கள் கப்பலில் சிக்குண்ட மீன்பிடிவலைகளை அகற்ற முயன்றுகொண்டிருந்த அவுஸ் திரேலிய கடற்படை வீரர்கள் மீது சீனக் கடற்படை சோனார் தாக்குதல்களை மேற்கொண் டது என அவுஸ்திரேலியா குற் றம்சாட்டியுள்ளது.

எச்.எம்.ஏ.எஸ். டூவூம்பா ஜப்பானின் விசேட கடல்வல யத்திற்கு காணப்பட்டவேளை இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளது என அவுஸ்திரேலியா தெரி வித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் தடை களை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் அவுஸ்திரேலிய கடற்படைக் கலம் ஈடுபட்டிருந் தவேளை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மீன்பிடிவலைகளை அகற் றும் நடவடிக்கைகள் இடம் பெற்றுக்கொண்டி ருந்தவேளை சீனாவின் நாசகாரி அவுஸ்திரே லிய கப்பலை நோக்கி நகர்ந்தது. சீன கப்பல் சோனாரை பயன்ப டுத்தியது. அதனால் அவுஸ்தி ரேலிய கப்பலின் சுழியோடிக ளுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை காணப்பட்டது எனவும் அவுஸ் திரேலியா தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சுழியோ டிகள் அங்கிருந்து வெளியேறி னர். இதன்போது சுழியோடிக ளுக்கு சிறிய காயங்கள் ஏற்பட் டன எனவும் அவுஸ்திரேலியா கூறியுள்ளது. (அ)

# ஆர்ஜென்ரீனா ஜனாதிபதியாக ஜேவியர் மில்லே தெரிவானார்!

புவனொஸ் அரேஸ், நவ. 21

ஆர்ஜென்ரீனா புதிய ஜனா திபதியாக ஜேவியர் மில்லே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி, நேற்று முன் தினம் இடம்பெற்ற ஜனாதிப தித் தேர்தல் முடிவுகளின்படி, அவர் கிட்டத்தட்ட 56 வீதமான வாக்குகளைப் பெற்று புதிய ஜனாதிபதியாக தெரிவு செய் யப்பட்டுள்ளார் என வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், ஜேவியர் மிலேயின் போட்டியாளரான சர்ஜியோ மஸ்ஸா 44 வீதமான வாக்குகளைப் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் முடிவு களை மீள் கணக்கீடு செய்ய வேண்டும் என போட்டி வேட் பாளரின் ஆதரவாளர்கள் போராட்டங்களை ஆரம்பித் துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# ரஷ்யாவில் உச்சத்தைத் தொட்டது இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு



மொஸ்கோ, நவ. 21

ரஷ்யாவில் பாதுகாப்புத் துறைக்கு இதுவரை இல்லாத அதிகபட்ச நிதி ஒதுக்கீடு செய் யும் பட்ஜெட்டுக்கு அந்த நாட்டு பாராளுமன்றம் ஒப்புதல் வழங் கியுள்ளது.

இது குறித்து பாராளுமன்ற அவைத் தலைவர் வியாசெஸ் லவ் வோலோடின் கூறியதாவது,

ரஷ்யாவுக்கு எதிராக மேற் கத்திய நாடுகள் அறிவித்துள்ள சுமார் 17,500 பொருளாதாரத் தடைகளின் தாக்கத்தைக் குறைப் பதற்காகவும், இராணுவத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்காகவும் 2024-26 சிறப்பு பட்ஜெட் பாரா ளுமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதில், பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு 25 சதவீதம் அதிக ரிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இது, இராணுவத்துக்கான அதிகபட்ச நிதி ஒதுக்கப்பட்ட சந்தர்ப்பமாகும்.

இந்த பட்ஜெட்டில் ஓய்வூதி யக் குறைப்பு போன்ற அம்சங் கள் இடம் பெற்றுள்ளதால் பாரா ளுமன்றத்தில் அதற்கு எதிராக ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி வாக்க ளித்தது.

தற்போதைய நிலையை சமா ளிக்க வேலைவாய்ப்புகளைக் குறைப்பது, குறிப்பிட்ட திட் டங்களுக்கு மட்டும் நிதியளிப் பது போன்ற உத்திகளை ரஷ்யா கையாண்டாலும், அது நீண்ட கால நோக்கில் எதிர் விளைவை உருவாக்கும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். (அ)

# மிஸ் யூனிவர்ஸ் 2023 ஆம் ஆண்டு அழகியாக தேர்வானார் நிகரகுவாவை சேர்ந்த ஷெய்னிஸ்

லண்டன், நவ. 21

மிஸ் யூனிவர்ஸ் 2023ஆம் ஆண்டுக்கான அழகியை தேர்வு செய்வதற்கான இறுதிப் போட்டி நேற்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமானது.

இந்நிலையில், நிகரகுவாவை சேர்ந்த ஷெய்னிஸ் பலாசியோஸ் மிஸ் யூனிவர்ஸ் 2023 பட்டத்தை வென்றார்.

இந்தியாவை சேர்ந்த ஸ்வேதா ஷர்தா மகுடத்தை தவறவிட்ட தாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், இந்தியா உள்பட பல நாடுகளில் அழகி போட்டி கள் நடந்து வருகிறது.

ஒவ்வொரு பெரிய நகரங்கள் வாரியாகவும், மாநிலங்கள் வாரி யாகவும், நாடுகள் வாரியாகவும் அழகி போட்டிகளை நடத்தி வருகின்றன.

இந்த மிஸ் யூனிவர்ஸ் 2023ஆம் ஆண்டுக்கான போட்டி மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடோர் நாட்டில் நடந்து வருகிறது.

அந்த நாட்டின் தலைநக ரான சான் சால்வடாரில் இறுதி போட்டி இன்று காலை 6.30 மணிக்கு தொடங்கியது.



இந்த போட்டியை முன் னாள் பிரபஞ்ச அழகி ஒலிவியா கல்போ நடத்துகிறார். சான் சால்வடாரில் உள்ள ஜோஸ் அடோல்போ பினெடா அரங் கில் இந்த பைனல் போட்டி தொடங்கியது.

இதில் மொத்தம் 90 நாடு களை சேர்ந்த அழகிகள் பங் கேற்றுள்ளனர். இவர்களில் ஒருவர் தான் மிஸ் யூனிவர்ஸ் 2023 பட்டத்தை வெல்ல உள்ள னர். இந்தியா சார்பில் ஒருவர் பங்கேற்றுள்ளார்.

இந்த மிஸ் யூனிவர்ஸ் 2023 இறுதி போட்டி மிஸ் யூனி வர்ஸ் யூடியூப் சேனல் மற்றும் மிஸ் யூனிவர்ஸ் எக்ஸ் பக்கத்தி லும் நேரடியாக ஒளிரப்பப்பட் டது. (அ)

# இந்த வருட இறுதிக்குள் கடன் சீரமைப்பு நிறைவு

## நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

**இந்த வருட இறுதிக்குள் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

குறித்த மறுசீரமைப்பு நடவடிக்கை நிறைவடைந்ததும் இடைநிறுத்தப்பட்டுள்ள சுமார் 200 வியாபார நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதன் பின்னர் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் என்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் இருந்தும் நிதியுதவிகள் கிடைக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

அடுத்த மார்ச் மாதத்தில் இருந்து அனைத்து துறைகளும் எழுச்சி பெரும் என்றும் ஒட்டு



மொத்த பொருளாதார நிலையையும் கருத்தில் கொண்டு வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

(அ)

# ஷம்மி சில்வா, சுதத் சந்திரசேகர ஆகியோரால் எனக்கு அச்சுறுத்தல்

## அமைச்சர் ரொஷான் ரணசிங்க

கொழும்பு, நவ. 21

ஷம்மி சில்வா மற்றும் சுதத் சந்திரசேகரவிடம் இருந்து தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் வரலாற்றில் அமைச்சர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது இதுவே முதல் தடவை என்றும் அவர் கூறினார்.

எனவே தனது பாதுகாப்பை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடமும் பாதுகாப்புப் படையினரிடமும் அவர் கோரிக்கை விடுத்தார்.



தேசிய விளையாட்டுகளில் உள்ள ஊழலை தடுப்பதே தனது நோக்கம் என்றும் இந்த அச்சுறுத்தல்கள் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளதாகவும் கூறினார். (அ)



# இலங்கைக்கு வந்த பசுபிக் வேர்ல்ட்

கொழும்பு, நவ. 21

பசுபிக் வேர்ல்ட் என்ற அதிசொகுசு பயணிகள் கப்பல் நேற்று அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பல் 1691 பயணிகள் மற்றும் 704 பணியாளர்களுடன் எகிப்தில் இருந்து வருகை தந்துள்ளது.

இங்கு ஜப்பானிய மற்றும் சீனப் பயணிகள் அதிகம் இருப்பதால் அவர்கள் கொழும்பு, காலி மற்றும் கண்டிக்கு செல்ல உள்ளனர்.

பனாமா நாட்டின் கொடியுடன் வந்த பசுபிக் வேர்ல்ட் கப்பல் மலேசியா நோக்கி புறப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# இலங்கையில் சிறு வயதில் கர்ப்பமாகும் 2 இலட்சம் பேர்

## கீதா குமாரசிங்க தகவல்

கொழும்பு, நவ. 21

2 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் சிறுவயதிலேயே கர்ப்பமாவதாகவும் அவர்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனை வழங்க, அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மகளீர், மற்றும் சிறுவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு கோடியே 13 இலட்சத்து 67 ஆயிரம் பெண்கள் நாட்டில் உள்ளனர். இவர்களில் 27 இலட்சத்து 13 ஆயிரம் பெண்கள் பாடசாலைக்கு செல்கின்றனர். 2 இலட்சத்து 2 ஆயிரத்து 287 சிறுவயது தாய்மார்கள் நாட்டில் உள்ளனர்.

சிறுமிகளின் தாய் வெளிநாடுகளில் வேலை சென்றுள்ள போது, அவர்களுக்கு வீட்டிலேயே பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்படுகிறது. அத்தோடு, தாய்- தந்தை பிரிந்து வாழ்வதாலும் சிறுமிகளின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

பாலியல் கல்வி தொடர்பாக இவர்களிடம் போதிய அறிவு இல்லாமல் உள்ளது. பொருளாதார பிரச்னைக் காரணமாக தாய்-தந்தை இருவரும் தொழிலுக்கு செல்லும் வீடுகள் அல்லது தாய் - தந்தை இருவரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள வீடுகளிலும் சிறுமிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

விசேடமாக பெற்றோர் மதுவுக்கு அடிமையான குடும்பங்களிலும் சிறார்கள் அதிகமாக பாதிக்கப்படும் அதேசபயம் தொலைப்பேசி பாவனையும் சிறார்களை அதிகம் பாதித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடும்ப நலக் கணக்கெடுப்பினால் இந்தத் தகவல்கள் பெறப்பட்டிருந்தன. 18 வயதுக்கு உட்பட்ட சிறார்களுடன், அவர்களின் அனுமதியுடன்கூட பாலியல் உறவில் இருப்பது எமது நாட்டை பொறுத்தவரை சட்டவிரோதமாகும்.

நாம் தற்போது இவ்வாறான சம்பவங்களினால் பாதிக்கப்படும் சிறார்களுக்கு, இலவச சட்ட ஆலோசனை வழங்க கிராமிய மட்டத்திலிருந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்-என்றார்.

(அ)

# இலங்கையில் புதிய வகை பாம்பு!

கொழும்பு, நவ. 21

இலங்கையில் 76 வருடங்களின் பின்னர் புதிய வகை பாம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஊர்வன தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட நெதுவிக்கிரமசிங்க, துலன் ஆர். விதானபத்திரன, மகேஷ் சி. டி சில்வா, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சுமானி எச். தென்னகோன், பேராசிரியர் சமீரா ஆர். சமரகோன் மற்றும் ஊர்வன நிபுணர் மெண்டிஸ் விக்கிரமசிங்க ஆகியோர் நீண்டகால ஆராய்ச்சியின் பின்னர் இந்த இனத்தை கண்டுபிடித்



துள்ளனர்.

இலங்கையில் காணப்படும் 108 வகையான பாம்புகளில் 10 இனங்கள் ஸ்கோகோபீடியா குழுவைச் சேர்ந்த பாம்புகளாக குறிப்பிடப்படுகின்றன.

கடந்த 76 வருடங்களுக்கு முன்னர் எட்வர்ட் டெய்லரால் ஹார்ன்பில் இனம் ஒன்று இலங்கையில் விஞ்ஞான ரீதியாக விவரிக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு திருகோணமலையை அண்மித்த பகுதிகளில் வாழும் ஐந்து வகையான பாம்புகள் பற்றிய விவரங்களை முன்வைத்துள்ளார்.

உலர் வலயத்திற்குட்பட்ட கிரித்தலே பிரதேசத்தில் இந்த புதிய வகை பாம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்நாட்டில் காணப்படும் பாம்பு இனங்களின் எண்ணிக்கை 109 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 3 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சா காரைநகரில் சிக்கியது!



யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம், காரைநகரி லுள்ள பற்றைக் காடொன்றில் இருந்து நேற்று அதிகாலை 101 கிலோ 750 கிராம் நிறை கொண்ட சுமார் 3கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சாப் பொதிகள் கடற்படையினரால் மீட்கப்பட்டன.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.

இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# உப பொலிஸ் பரிசோதகருக்கு ஐஸ் வழங்கிய சந்தேகநபர் கைது

கொழும்பு, நவ. 21

திருகோணமலை பகுதியில் போதைப்பொருளுடன் கைதான உப பொலிஸ் பரிசோதகருக்கு ஐஸ் ரக போதைப்பொருளை வழங்கிய சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தமது குடும்ப உறுப்பினர்களுடன் தாய்லாந்திலிருந்து நேற்று முன் தினம் பிற்பகல் நாடு திரும்பியபோது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொரளை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய குறித்த சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக காவல்துறை போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, கடந்த 11ஆம் திகதி கைதான நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்த 32 வயதுடைய உப பொலிஸ் பரிசோதகர், எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## நாடு....

அரசாங்கத்தினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

எவ்வாறாயினும், சந்தையில் வெள்ளை சீனிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அவ்வாறான தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று தெரிவித்தார்.

நாட்டில் 19,000 மெற்றிக் தொன் சீனி கையிருப்பில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான சூழலில் சீனி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் நோக்கில், வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ, சீனி இறக்குமதியாளர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சம்பந்தப்பட்ட....

குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பொலிஸ் காவலில் வைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், விளக்கமறியலில் வைக்கப்பட்டு, உடல் நிலை சீராக இல்லாத நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார். அந்த இளைஞன் உயிரிழப்பதற்கு முன்னர் வெளியிட்ட காணொளியில், பொலிஸார் பெற்றோல் பையினுள் தன்னை நுழைத்து அடித்ததாகவும், தலைகீழாக கட்டித்தூக்கி முகத்தினை துணியினால் மூடிக் கட்டி, இரண்டு கைகளையும் பின் பக்கமாக கட்டி, தண்ணீர் ஊற்றி ஊற்றி அடிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் ஒருநாள் முழுவதும் சாப்பாடு வழங்காமல், சாராயத்தினை குடிக்குமாறு வழங்கி குறித்த இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதாகவும், இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கோ அல்லது வேறு எங்குமோ சென்று முறையிடக்கூடாது என்றும் மிரட்டியதாக அந்த இளைஞன் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது எல்லாம் பொலிஸ் நிலையத்தில் நடக்கும்போது பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எங்கே சென்றார்? அவர் ஏன் இதனை தடுக்கவில்லை. தாக்குதல் நடத்தி பொலிஸாரை ஏன் தண்டிக்கவில்லை. குறித்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதாக அறிய முடிகிறது. உயிரிழந்த இளைஞனின் மரண வாக்குமூலம் சித்திரவதைகள் அம்பலமாகும் நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதுடன் விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பது வெறும் கண்துடைப்பாகும்.

உடனடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும். வட்டுக்கோட்டை பொலிஸாரின் செயற்பாடுகள் அண்மைக் காலமாக அராஜகமான ரீதியில் செல்வதை ஊடகங்கள் மூலம் வெளியாகும் செய்திகள் எடுத்துக் காட்டுகின்றன.

செய்தி சேகரிக்க செல்லும் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து அவர்களை செய்தி சேகரிக்க விடாது இடையூறுகளை விளைவிக்கின்றனர். தங்களது தரப்பில் உள்ள குற்றச்சாட்டுகளை மறைப்பதற்காகவா இவ்வாறு ஊடகவியலாளர்களை தடுக்கின்றார்கள் என்ற சந்தேகமும் எழுகின்றது. எனவே பொலிஸார் தமது கடமைகளை சரிவர செய்யவேண்டும். சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டியது தான் பொலிஸாரின் வேலை. அதை விடுத்து தாங்கள் சட்டத்தை கையில் எடுத்து சித்திரவதைகளில் ஈடுபட முடியாது - என்றுள்ளது. (அ)

## ராஜபக்ஷக்களை....

ஏற்படுத்தி நாட்டைச் சீரழித்தவர்கள் ராஜபக்ஷக்கள் என்று உயர் நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதை நாம் வரவேற்கின்றோம். ஆனால், இந்தத் தீர்ப்புக்கு மதிப்பளிக்காத மஹிந்த ராஜபக்ஷ, நல்லாட்சி அரசில் இருந்த தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தியினரே நாட்டைச் சீரழித்தவர்கள் என்று வெட்கம் இல்லாமல் கூறியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரச் சீரழிவுக்குக் காரணமானவர்கள் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கமைய ராஜபக்ஷக்களினதும் அவர்களின் சகாக்களினதும் குடியுரிமையைப் பறிக்க வேண்டும்.

அவர்களிடமிருந்து நட்டஈடு பெற வேண்டும். அவர்கள் திருடிய பணம் தற்போதும் அவர்களிடமே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அவர்களைச் சும்மாவிட முடியாது. அவர்களைக் கூண்டோடு தூக்கிலிட வேண்டும" - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, லக்ஷ்மன் கிரியெல்ல, ராஜித சேனாரத்ன மற்றும் சரத் பொன்சேகா ஆகிய எம்.பிக்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். (அ)

## கொக்குத்...

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி இடத்தை நேற்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணியானது மீளவும் ஆரம்பமாகி உள்ளது.

தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியை கொண்டு இன்னும் இரண்டு வாரங்களுக்கு அகழ்வுப பணிகளை மேற்கொள்ள முடியும் எனக் கூறியிருக்கிறார்கள்.

பல்வேறு தளங்களில் உடல்கள் காணப்படுகின்ற காரணத்தினால் நீண்ட காலமாக அகழ்வை செய்வதற்கான தேவை ஏற்பட்டிருப்பதனை உணர்ந்திருக்கின்றார்கள்.

வீதிக்கு குறுக்காகவும், வீதிக்கு அடியிலும் கூட சிலவேளை மனித எச்சங்கள் இருக்கக்கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது.

அதனால் இதனை பரிசீலித்து நீண்ட நாட்களாக செய்யப்பட வேண்டிய செயன்முறை என்ற அடிப்படையில் அதற்கான நிதியை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து, அரசாங்க அதிபருக்கு விடுவிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பமாக இருப்பதாகவும் அந்த நிதி விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

இந்த செயற்பாடுகள் தற்போது சரியான முறையில் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு எலும்பு கூடுகளும் கை, கால், உடம்பு, தலை அனைத்தும் பொருந்தக்கூடிய வண்ணமாக எடுக்கப்படுகின்ற காரணத்தினால்தான் நீண்ட நேரம் இதற்கு செலவாகின்றது. எலும்புக் கூடுகளை உடையாமல் கவனமாக எடுக்கவேண்டிய தேவையும் இருக்கின்றது.

ஒவ்வொரு கட்டமாக அகழ்ந்து தற்போது 17 பேரின் எலும்பு கூடுகள் முழுமையாக எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனை விட கூடுதலான எண்ணிக்கையில் எலும்பு கூடுகள் இருக்கும் என்பது தெளிவாக தெரிகின்றது. அவர்களுடைய சீருடைகள் மற்றும் வேறு பல பொருட்களும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது.

இவர்கள் எந்த காலப் பகுதியில் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதை என்பதனையும் சில பரிசோதனைகளின் பின்னர் அறியக்கூடியதாக இருக்கும். அதற்கு சில நாட்கள் எடுக்கும்-என்றார். (அ)

# வட்டு.பொலிஸாரின் அராஜகம் கட்டுக்கடங்காது தொடர்கிறது

## சட்டத்தரணி சுகாஷ் சீற்றம்

யாழ்ப்பாணம்,நவ.21

வட்டுக்கோட்டைப் பொலிசாரின் சட்ட விரோத சித்திரவதைகளால் அப்பாவி இளைஞன் கொல்லப்பட்டமை மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்தக் கொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றமிழைத்த பொலீசார் உடனடியாகக் கைது செய்யப்படுவதோடு விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்று கோருகின்றோம் என குறிப் பிட்டுள்ளார். (அ)

# கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளில் மண்சரிவு

கொழும்பு, நவ. 21

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டி - மடுல்கல பிரதான மார்க்கத்தில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் குறித்த வீதியூடான போக்குவரத்து முற்றாக பாதிப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

அதேநேரம், நாட்டின் 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை தொடர்ந்தும் நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தினேஷ்....

என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அவர்கள் மூவரும் என்ன பேசினார்கள் என்ற தகவல் வெளியாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## எதிர்...

நிலையிலும், துப்பாக்கி சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்க தகடு, உடைகள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களும் மீட்கப்பட்டிருந்த நிலையில் குறித்த அகழ்வுப்பணியானது இடைநிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்படுமா என்ற ஐயம் பல்வேறு தரப்பினரிடமும் நிலவிய நிலையில் மீண்டும் நேரற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் அகழ்வு பணியானது முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க. வாசுதேவ , தடயவியல் பொலிசார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இறுதியாக அகழ்வு பணிகள் நிறைவடைந்ததும் பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்த பொலித்தீன் உறைகள் , உடல் எச்சங்களுக்கு மேற்பகுதியில் காணப்பட்ட மண்கள் அகற்றும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதேவேளை தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வு இடத்திற்கு வருகை தர தாமதம் நிலவிவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் எல். இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் தற்பரன், சட்டத்தரணிகளான வி.கே.நிறஞ்சன், கு.ஆன் சுமங்கலா மற்றும் கொக்குளாய் பொலிஸ் நிலைய பொலிஸார், தடயவியல் பொலிஸ் பொலிஸார், விஷேட அதிரடி படையினர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட தரப்பினர் இடத்தை பார்வையிட்டு கலந்துரையாடியதன் பின்னர் குறித்த அகழ்வுப்பணியானது ஆரம்பமாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (அ)

## போராட்டம்....

கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இரும்பு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு, அங்கு விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். (அ)

## தடுப்பு....

உத்தரவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான சித்தங்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்பவர் நேற்று முன் தினம் உயிரிழந்திருந்தார்.

சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் உள்ளிட்ட இருவர் கடந்த 8ஆம் திகதி திருட்டுச் சம்பவமொன்று தொடர்பிலான சந்தேகத்தில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நான்கு நாட்களாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படவுமில்லை விடுவிக்கப்படவும் இல்லை என்பதனால் உறவினர்கள் அச்சமடைநதனர்.

தாயார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளார்.

அதனால் சந்தேகநபர்கள் கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

பொலிஸாரின் ஆட்சேபனையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். இதன் போதே இருவரும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த சந்தேகநபர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டப் பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூறு பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சவ அறையில் வைக்கப்பட்டிருந்தது. உடற்கூறு பரிசோதனையின் பின்னரே உயிழப்புக்கான வைத்திய அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# அமைச்சுப் பதவியை துறக்கத் தயாரில்லை!

## கூறுகிறார் ரொஷான் ரணசிங்க



கொழும்பு, நவ. 21

**விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யத் தயாராக இல்லை என விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சியில் சேரும் எண்ணம் இல்லை தமக்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

விளையாட்டுத்துறை இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டினார்.

தாம் இராஜனாமா செய்வது அரசாங்கத்திற்கு வாக்களித்த 69 இலட்சம் வாக்காளர்களின் ஆணைக்கு எதிரானது என்றும் அவர் வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும், தன்னை அமைச்சர் பதவியில் இருந்து நீல், அதனை செய்ய முடியும். ஜனாதிபதி ஊடகப் பிரிவும் ஜனாதிபதியும் இரண்டல்ல ஒன்றே எனத் தெரிவித்த அவர், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிவிப்புகள் எப்போதும் ஜனாதிபதியின் கருத்தை வெளிப்படுத்துகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# ஆபத்தான நிலையில் வட்டுவாகல் பாலம்



முல்லைத்தீவு, நவ. 21

முல்லைத்தீவு நகரத்திற்கான பிரதான பாதைகளில் ஒன்றாக காணப்படுகின்ற ஏ-35 தர வீதியின் வட்டுவாகல் பாலமானது எந்தவித புனரமைப்புக்களுமின்றி மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு சேதமடைந்து காணப்படும் பாலம் அடிக்கடி உடைவுகள் ஏற்படும்போது தற்காலிக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றதே தவிர நிரந்தர புனரமைப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது பாலத்தின் மையப்பகுதியில் பாரிய உடைவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் பாரிய குழியும் காணப்படுகின்றது.

பாலத்தில் பல்வேறு இடங்களில் வெடிப்புக்களும் வீதி பாதுகாப்பு அற்றதாகவும் வீதியில் சில இடங்களில் தாழிறங்கியும் காணப்படுகிறது. பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்து கூறியும் புனரமைப்புப் பணிகள் எவையும் நடைபெறவில்லை.

தற்போது மழை காலமாகையால் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மேவி செல்வதோடு, கனரக வாகனங்களும் இதன் ஊடாக செல்லும்போது மேலும் உடைவு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும்

பல விபத்துகள் குறித்த பகுதியில் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மழை காலங்களிலும் குறித்த பாலம் இவ்வாறான நிலைமைக்கு செல்வதோடு ஆபத்தான முறையில் பிரயாணிகள் பயணம் செய்யவேண்டிய நிலையும் காணப்படுவதாகவும், குறித்த பாலத்தினை சீரமைத்து தரும்படியும் அப்பாலத்தினூடாக பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# புத்தக கடையில் கத்திக்குத்து!

கொழும்பு, நவ. 21

பன்னிபிட்டிய மாம்புல்கொட பிரதேசத்தில் உள்ள புத்தக விற்பனை நிலையத்திற்கு வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் கடையின் உரிமையாளர் உட்பட இருவர் காயமடைந்துள்ளதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த இருவரும் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் கடையின் உரிமையாளரை தாக்கியதில், சம்பவத்தை சமரசம் செய்ய வந்த அயலவர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார். தாக்குதலில் அவரது கழுத்தில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் ஹோமாகம தலைமையகப் பொலிஸாரின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# நகை அணியாததால் பெண்ணை தாக்கிவிட்டு தப்பிச்சென்ற கும்பல்

கொழும்பு, நவ. 21

வீதியில் நடந்து சென்ற பெண் சங்கிலி அணியாததால் அவரை தாக்கிவிட்டு வீதியில் தள்ளி விட்டு முகமூடி கொள் ளைக் கும்பல் ஒன்று தப்பி சென்றுள்ளது.

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றில் வழிபாட்டை முடித்துக்கொண்டு தனது வீடு நோக்கி குறித்த பெண் நடந்து செல்கையில் , அவரை மோட்டார் சைக்கிள் ஒன்றில் தங்கள் முகங்களை மறைத்து துணியால் கட்டியவாறு பின்தொடர்ந்த இருவர் அப்பெண்ணின் கழுத்தில் கை வைத்துள்ளனர்.

அதன்போதே அப்பெண் கழுத்தில் தங்க நகைகள் எது வும் அணிந்திருக்கவில்லை என தெரிந்துகொண்டதும் அப் பெண்ணை தாக்கி வீதியில் தள்ளி விழுத்தி விட்டு முகமூ டிக் கொள்ளையர்கள் தமது மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றுள்ளனர். (அ)

# தரமற்ற இம்யூனோகுளோபுலின் கொள்வனவு; மூத்த அதிகாரிகள் நால்வர் அதிரடியாக கைது!

கொழும்பு, நவ. 21

தரமற்ற இம்யூனோகுளோபுலினை கொள்வனவு செய்தமை தொடர்பாக சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் மூத்த அதிகாரிகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் கபில விக்கிரமநாயக்க, உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்றுக் காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ அறிவித்துள்ளார். (அ)

# பாலியல் இலஞ்சக் குற்றச்சாட்டை நிராகரித்தார் கோப் குழு தலைவர்

கொழும்பு, நவ. 21

தமக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள பாலியல் இலஞ்சக் குற்றச்சாட்டை மறுப்பதாக கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், தாம் குற்றவாளி என நிருபிக்கப்பட்டால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாகவும் கூறினார்.

இல்லையெனில் தன் மீது குற்றச்சாட்டை முன்வைத்த உறுப்பினர் தனது சிறப்புரிமைகளை மீறியதற்காக தண்டிக்கப்படவேண்டும் எனவும் ரஞ்சித் பண்டார மேலும் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், சபையில் தான் இல்லாத நேரத்தில் தெரிவிக்கப்பட்ட இந்த குற்றச்சாட்டின் மூலம் தனது சிறப்புரிமை பாரியளவில் மீறப்பட்டுள்ளதாக கூறினார்.

இது தொடர்பில் சபாநாயகருக்கு எழுத்துமூல அறிவித்துள்ளதாகவும், சிறப்புரிமைக் குழுவின் முன்னிலையில் உரிய குற்றச்சாட்டை ஆராயுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

# சித்தன்கேணி இளைஞர் உயிரிழப்பு; பொலிஸார் இருவருக்கு இடமாற்றம்!

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த விளக்கமறியல் கைதியொருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தமை தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய பொலிஸார் இருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் மீது அவரது உறவினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

உயிரிழந்தவர் காணொளியில் வழங்கிய வாக்குமூலமும் சமூக வலைத்தளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணப் பிராந்தியத்துக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைக்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், சேவை அவசியம் கருதி பொலிஸார் இருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# குடியுரிமை விடயம் நீதிமன்றத்துக்கு சென்றால் அதனை எதிர்கொள்ள உரிய சட்ட நடவடிக்கை

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

பொருளாதார குற்றவாளிகளாக உயர்நீதிமன்றினால் அறிவிக்கப்பட்ட தங்களின், குடியுரிமை தொடர்பான விடயம் நீதிமன்றுக்குச் சென்றால், அது குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுப்போம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெல்லன்வில ரஜமகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வுகளை அடுத்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், குடியுரிமைகயை பறிக்குமாறுக் கூறப்பட்டாலும் இதுவரை அவ்வாறனதொரு விடயம் இடம்பெறவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஒருவேளை இறுதி முடிவுகள் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டாலோ அல்லது அவற்றையும் மீறி குடியுரிமை தொடர்பான விடயம் நீதிமன்றத்திற்குச் சென்றாலோ அங்கு நிச்சயம் போராடுவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஓய்வறையில் மனமுடைந்த இந்திய அணி வீரர்கள்!

இறுதிப்போட்டி தோல்விக்கு பின்னர் ஓய்வறையில் இந்திய அணியினர் மனமுடைந்து அழுதனர் என பயிற்றுவிப்பாளர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலிய அணி இறுதிப்போட்டியில் வெற்றிபெற்றவேளை முகமட் சிராஜ் கண்ணீரை அடக்க முடியாமல் மைதானத்திலேயே அழுதார்.

இந்திய அணித்தலைவர் ரோகித் சர்மாவும் நீர் திரண்ட விழிகளுடன் மைதானத்திலிருந்து அவசரமாக வெளியேறினார்.

இறுதியில் ஆறு விக்கெட்தோல்விக்கு பின்னர் இந்திய அணியினர் உடைந்து போயுள்ளனர் என இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

“ஆம் ரோகித் சர்மா பலத்த ஏமாற்றத்துடன் உள்ளார். ஓய்வறையில் ஏனைய வீரர்களும் அவ்வாறான மனோநிலையிலேயே உள்ளனர். பெருமளவு உணர்ச்சி வெளிப் பாடுகள் ஓய்வறையில் காணப்பட்டன.

அணியின் பயிற்றுவிப்பாளராக அதனை பார்ப்பதற்கு கடினமாக உள்ளது. அவர்கள் எவ்வளவு தூரம் கடினமாக முயற்சி செய்தார்கள் என்பது எனக்கு தெரியும். அவர்கள் என்ன தியாகங்களை செய்துள்ளார்கள் என்பதும் எனக்கு தெரியும் எனவும் டிராவிட் தெரிவித்துள்ளார்.



அதனை பார்ப்பது கடினமாக உள்ளது. ஏனென்றால் ஒவ்வொரு வீரரையும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். ஆனால் இதுதான் விளையாட்டு - இது நடக்கலாம் சிறந்த அணி இறுதியில் வெற்றி பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாளை காலை சூரியன் நிச்சயமாக வரும். நாங்கள் கற்றுக்கொள்வோம். அதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு ஏனையவர்களை போல முன்னோக்கி நகர்வோம்” எனவும் குறிப்பிட்டுள்ள டிராவிட், ஒரு விளையாட்டு வீரராக இதனையே நீங்கள் செய்வீர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# முடிந்தவரை முயற்சித்தோம்!



நடப்பு கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியை தழுவி உள்ளது.

இந்த சூழலில் போட்டி முடிந்த பிறகு கருத்து வெளியிட்ட அணித் தலைவர் ரோகித் சர்மா-

ஆட்டத்தின் முடிவு நமக்கு சாதகமாக இல்லை. இந்த நாள் சிறப்பானதாக அமையவில்லை. நாங்கள் முடிந்த வரை முயற்சித்தோம். கூடுதலாக 20 - 30 ஓட்டங்கள் எடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். கோலியும், ராகுலும் சிறப்பான கூட்டணி அமைத்தனர். நாங்கள் 270 முதல் 280 ஓட்டங்கள் வரை எதிர்பார்த்தோம். ஆனால், தொடர்ந்து விக்கெட் இழந்த காரணத்தால் அது முடியாமல் போனது. 240 ஓட்டங்களை டிபென்ட் செய்யும்போது சீரான இடைவெளியில் விக்கெட் வீழ்த்தவேண்டும்.

நாங்கள் அதை செய்ய விரும்பினோம். இருந்தும் ஹெட் - லபுஷேன் இடையில் அமைந்த கூட்டணி அந்த வாய்ப்பை பறித்தது. இரவு நேரத்தில் மின் ஒளிக்கு கீழ் விளையாடும்போது விக்கெட் துடுப்பாட்டம் செய்ய சிறப்பானதாக இருந்தது என்பதை உணர்ந்தேன். அதை காரணமாக சொல்லி தப்பிக்க விரும்பவில்லை. துடுப்பாட்டம் செய்தபோது ரன் குவிக்க தவறினோம். 3 விக்கெட் வீழ்த்தி பவுலர்கள் சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். மேற்கொண்டு ஒரு விக்கெட் வீழ்த்தி இருந்திருந்தால் அதன் தாக்கம் வேறு விதமாக இருந்திருக்கும் - என்றார்.

# ஆறுதல் சொன்ன அனுஷ்கா

2023 கிரிக்கெட் உலக கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா சம்பியனானதும் மில்லியன் கணக்கான இந்திய ரசிகர்களை போல விராட் கோலியும் மனம் உடைந்து காணப்பட்டவேளை அனுஸ்கா சர்மா அவருக்கு ஆறுதல் அளித்ததை காண்பிக்கும் படம் வைரலாகிவருகின்றது.

உலகின் இந்தியாவின் மில்லியன் கணக்கான ரசிகர்களை போல அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு பின்னர் விராட்கோலியும் மனமுடைந்த நிலையில் காணப்பட்டார்.

உலகக் கிண்ண தொடரில் அவரது அற்புதமான துடுப்பாட்டத்திற்காக தொடரின் நாயகன் என அறிவிக்கப்பட்ட விராட் கோலி தொடரில் அதிக ஓட்டங்களை பெற்ற வீரர் என்ற பெருமையையும் பெற்றார். ஆனால் அவர் வெற்றிக்கிண்ணத்தினை தனது கரங்களில் ஏந்துவதற்கு அது மாத்திரம் போதுமானதாகயிருக்கவில்லை.

டிரவஸ் ஹெட்டின் துடுப்பாட்டம் காரணமாக



அவுஸ்திரேலியா வெற்றி பெற்ற பின்னர் விராட் கோலி தனது போட்டியை காண்பதற்காக மைதானத்திற்கு வந்திருந்த தனது மனைவியிடம் சென்றார்.

மனமுடைந்த நிலையில் காணப்பட்ட விராட் கோலியை அணைத்து ஆறுதல் சொல்லும் படம் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது. (அ)



# பங்களாதேஷ் அணி தலைவராக ஷன்டோ

நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷின் அணித்தலைவராக நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் இறுதியாக விளையாடிய டெஸ்ட் போட்டியான ஆப்கானிஸ்தானுக்கெதிரான போட்டியில் பங்களாதேஷுக்குத் தலைமை தாங்கிய லிட்டன் தாஸுக்கு ஒரு மாதம் பிரசவகால விடுப்பு வழங்கப்பட்டுள்ள நிலையிலேயே பங்களாதேஷுக்கு ஷன்டோ தலைமை தாங்கவுள்ளார்.

இதேவேளை, விரல் முறிவடைந்தமை காரணமாக லிட்டனுக்கு முதல் அணித்தலைவராக இருந்த ஷகிப் அல் ஹஸனும் இத்தொடரில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குழாம்:

நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (அணித்தலைவர்), மஹ்முடுல் ஹஸன் ஜோய், ஸகிர் ஹஸன், ஷட்மன் இஸ்லாம், மொமினுல் ஹக், முஷ்பிக்கூர் ரஹீம், நுருல் ஹஸன் சொஹான், மெஹிடி ஹஸன் மிராஸ், தஜியுல் இஸ்லாம், நயீம் ஹஸன், சைட் காலிட் அஹ்மட், ஷொரிஃபுல் இஸ்லாம், ஹஸன் மஹ்மூட், ஷடாட் ஹொஸைன் டிப்பு, ஹஸன் முராட்.

# போட்டியின்போது விராட் கோலியை கட்டிப்பிடித்த பலஸ்தீன ஆதரவாளர்!



2023 ஆம் ஆண்டுக்காள ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவின் நரேந்திர மோடி விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

இப் போட்டியில் இந்திய அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும்போது உலகின் கவனத்தை ஈர்த்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

போட்டியின் போது பலஸ்தீன ஆதரவாளர் ஒருவர் திடீரென மைதானத்திற்குள் ஓடிச் சென்று கோலியை கட்டிப்பிடித்தார். இதனால் போட்டி சற்று நேரம் தடைப்பட்டது.

போட்டியின் 13ஆவது ஓவரின் போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் பலஸ்தீன கொடியுடன் “பலஸ்தீனத்துக்கு விடுதலை” என்ற வாசகம் எழுதிய ரீ-சேர்ட்டுடன் மைதானத்திற்குள் ஓடிச் சென்று இந்திய வீரர் கோலியை கட்டிப்பிடித்தார்.

இதன்போது சாதுரியமாக செயற்பட்ட கோலி அதிலிருந்து விலகிச்சென்றார்.

உடனடியாக செயற்பட்ட மைதான பாதுகாப்புப் பிரிவினர் குறித்த நபரை மைதானத்தில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்தனர்.

ஈழநாடு



# வரலாற்றில் இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல்? யூத தேசம் எங்கெல்லாம் உருவாக இருந்தன?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

ஐரோப்பாவில் யூதர்களைக் கண்டு வெறுப்படைந்த காலம் ஒன்று இருந்தது. குறிப்பாக முதலாம் - இரண்டாம் உலகப் போருக்கு முன்பாகவே இத்தகைய வெறுப்பு யூத மக்கள் மீது இருந்தது என பல வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவில் குடிபுகுந்த யூதர்களை எப்படி அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது என்பதில் ஒவ்வொரு நாடும் பெரும் ஆலோசனைகளில் ஈடுபட்டனர். வேறிடங்களில் குடியேற்றுவது பற்றி புதிய பல திட்டங்களை வகுத்தனர்.

**யூதர்களை பூங்கொத்து கொடுத்து வரவேற்ற பாலஸ்தீனர்!**

ஐரோப்பாவில் இருந்து வெளியேற்றப்பட்ட யூதர்களை, பாலஸ்தீனியர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள். அங்கு பாலஸ்தீனம் சென்று கால்பதித்து மெல்ல மெல்ல அவர்களின் நிலங்களை அபகரித்து இன்றைக்கு பாலஸ்தீனர்கள் 10 வீதத்திற்கு குறைவான நிலத்தில் வசித்து தங்களின் தாய்நாட்டை இழந்து நிற்கதியாய் இருக்கிறார்கள் என்பது காலக் கொடுமையாகும்.

அப்படி பாலஸ்தீனத்தில் யூத மக்கள் வந்திருக்காவிட்டால், வேறு என்ன திட்டங்கள் எல்லாம் இந்த உலக நாடுகள் அவர்களுக்காக வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே அலசலே இந்த ஆக்கம்.

**இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல் :**

பாலஸ்தீனம் என்னும் தேசம் சரித்திர நியாயங்களின் அடிப்படையிலும், அம்மண்ணின் பூர்வீகக் குடிகள் என்கின்ற முறையிலும் பார்த்தால், கண்டிப்பாக அது பாலஸ்தீன அராபியர்களுக்கு உரியதுதான் என கூறினாலும், யூதர்களும் அந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் தான்.



யூதர்களும் அந்த மண்ணில் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பே வந்தேறிகளாக வாழ வந்தவர்கள் தான். அராபிய இனம் மத்திய கிழக்கு நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளான சிரியா, ஜோர்டான், லெபனான், ஈராக், எகிப்து, ஈரான், சவுதி அரேபியா முழுக்க பரவி இருந்த இனம். அந்த இனம் பாலஸ்தீனிலும் பரவி இருந்தது.


அதனால் பாலஸ்தீன அராபியர்கள், அல்லது பாலஸ்தீன முஸ்லீம்கள் என்று அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் ஒரு காலத்திலும் பாலஸ்தீனை விட்டு வெளியேறியதில்லை.

1948ல் அவர்கள் தேசத்திற்குள், அவர்கள் அனுமதியின்றி ஐ.நா மற்றும் அமெரிக்கா, பிரிட்டன் துணையுடன் இஸ்ரேல் என்னும் தேசம் உருவானதாலும், அதனை முன்னிட்டு நடந்த போர்களினாலும் அகதிகளாக்கப்பட்டு சமீபத்தில் முழுமையாக நாடற்றவர்களாக வெளியேற்றப்பட்ட இனமாகி உள்ளனர்.

**அமெரிக்காவின் யூத நாடு திட்டம்:**

யூதர்களுக்கு ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என 1825-ல் அமெரிக்காவின் நியூ யார்க்கில் உள்ள அரசியல் வாதியும் கதாசிரியருமான மோர்டியாக் மேனுவேல் நோஹ் 27 சதுர மைல் பரப்பளவு கொண்ட ஒரு தீவை வாங்கினார். எறாரத் (யுசுயுசுயுவு- உவைல ழக சுநகரபந)


CHICAGO DAILY SUN TIMES
4¢ FINAL 660,000
Its name is Israel
U.S. RECOGNIZES JEWISH STATE
Stories on page 2 and back page




என அந்தத் தீவிற்கு பெயர்சூட்டினார். இதனை அவர் யூதர்களுக்கான தாய்நாடாக மாற்றத் திட்டமிட்டார்.

அந்தத் தீவில் ஒரு பெரும் கல்வெட்டையும் நிறுவினார். அமெரிக்கா சுதந்திரம் பெற்ற 50வது ஆண்டில் இதை ஒரு சாதனையாக அறிவிக்க அவர் முனைந்தார். ஆனால் இந்த யோசனையை யாரும் செவிமடுக்கவில்லை என்பதால் அவர் திட்டத்தைக் கைவிட்டார். ஆனால் அவர் நிறுவிய கல்வெட்டு இன்றைக்கும் அங்கே உள்ளது.

> **இரண்டாம் உலகப் போரின் முன்னர் ஐரோப்பாவில் குடிபுகுந்த யூதர்களை எப்படி அங்கிருந்து வெளியேற்றுவது என்பதில் ஒவ்வொரு நாடும் பெரும் ஆலோசனைகளில் ஈடுபட்டனர். வேறிடங்களில் குடியேற்றுவது பற்றி புதிய பல திட்டங்களை வகுத்தனர். அதனைப்பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே இந்த அலசலாகும்.**

**உகாண்டாவில் யூத நாடு:**

பிரித்தானிய எழுத்தாளர் ஜோசப் சாம்பேர்லென் (துழளநிா ஊாயஅடிநசடய஡ை)அவர்களின் காணியாகத் திகழ்ந்த கிழக்கு ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியை யூதர்களுக்கான தாயகமாக மாற்றத் திட்டமிட்டார். இந்தத் திட்டத்தை அவர் 1903-ல் பேசலில் நடைபெற்ற ஆறாவது சர்வதேச யூதர்கள் மாநாட்டில் அறிவித்தார்.

ஐரோப்பா முழுவதும் யூதர்களுக்கு எதிராக பெருகி வரும் எதிர்ப்பலைகளை சுட்டிக்காட்டி இதிலிருந்து தப்பிக்க விரைவில் ஒரு பாதுகாப்பான இடத்தை நாம் தேர்வு செய்தாக வேண்டும் என அவர் வற்புறுத்தினார். இதனை தியோடர் ஹெர்சலே ஒரு தற்காலிகத் தீர்வாக ஒப்புக்கொண்டார். பிரிட்டன் உகாண்டாவில் 5000 சதுர கிலோ மீட்டர் நிலத்தை ஒதுக்கவும் ஒப்புக் கொண்டது.

1904-ல் ஒரு பெரும் குழு இதனை ஆய்வு செய்ய அங்கே பயணித்தது. ஆனால் 1905-ல் ஆப்பிரிக்காவில் ஒரு யூத தாயகத்தை ஏற்படுத்துவது முதல் மாநாட்டின் தீர்மானங்களில் இல்லை என்பதால் இதனை ஏற்க இயலாது என பெரும் எதிர்ப்புகள் கிளம்பின.

**யூதர்கள் ரஷ்யாவுக்கு குடிபெயர்வு :**

சிலுவைப்போரில் பின் அமைந்த இஸ்லாமிய பேரரசு அதாவது துருக்கியை தலைமையிடமாக கொண்டு எகிப்து ஈராக் சிரியா ஜோர்டான் லெபனான் ஆகியவற்றை உள்ளடக்கிய ஓட்டோமான் பேரரசு மீண்டும் யூதர்களை மீள் குடியேற்றம் செய்தது.

ஆயினும் அச்சத்தால், பெரும்பாலான யூதர்கள் ரஷ்யாவுக்கு குடிபெயர்ந்தார்கள். ரஷ்யாவுக்கு அதனுடைய அண்டை நாடு லிதுவேனியா எல்லை பிரச்னை இருந்தது. தங்களுக்கென தனி நாடு அமைக்கும் எண்ணத்தில் இருந்த யூதர்கள் அதன் எல்லைப்பகுதி நிலங்களை ரஷ்ய அதிகாரிகளிடம் லஞ்சம் கொடுத்து வாங்கி குவிக்கத் தொடங்கினர்.

அப்போது ரஷ்யப் பேரரசர் அலெக்சாண்டர் II கொல்லப்படவே அது யூதர்களின் சதியாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்ட ரஷ்ய அதிகாரிகள் யூதர்களை நாட்டை விட்டு விரட்டினார்கள். 150 ஆண்டுகளுக்கு முன் ரஷ்யாவை விட்டு விரட்டப்பட்ட யூதர்களில் பலர் மீண்டும் துருக்கி பேரரசில் குடியேறினார்கள்.

போலந்து, லிதுவேனியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளில் குடியேறியிருந்தார்கள். பெரும்பாலான யூதர்கள் ஜெர்மனியில் குடியேறியிருந்தார்கள். யூதர்களின் நிதி ஆளுமை நடவடிக்கை காரணமாக 50,000 யூதர்கள் லிதுவேனியாவில் கொல்லப்பட்டார்கள்.

**கிழக்கு ரஷ்யாவில் யூத தேசம் ?**

யூதர்களின் எண்ணிக்கை படு வேகமாக வளர்ந்துவருவதை ரஷ்யா ஒரு நெருக்கடியாகப் பார்த்தது. அதனால் இதனைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு என்று ஒரு தனித்த நிலப்பகுதியை ஏற்படுத்த அவர்கள் முடிவு செய்தனர்.

ரஷ்யா அங்கே சுயாட்சியுடன் கூடிய ஒரு சோசலிச வாழ்க்கையை அளிக்கலாம் என்றும், ஆனால் தேசிய அளவில் அவர்கள் ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே இருப்பார்கள் என்றும் அறிவித்தது.


THE PALESTINE POST
STATE OF ISRAEL IS BORN
Most Crowded Hours in Palestine's History
JEWS TAKE OVER SECURITY ZONES
Egyptian Air Force Spitfires Bomb Tel Aviv; One Shot Down
U.S. RECOGNIZES JEWISH STATE
Proclamation by Head Of Government

கிழக்கு ரஷ்யாவில் சீனாவின் எல்லை அருகில் அவர்களுக்கு ஒரு நிலப்பரப்பையும் அவர்கள் இதற்காக ஒதுக்கினார்கள். இதுதான் பிரோபித்சான் (Birobidzhan) பகுதி ஆகும். கடும் குளிர் பிரதேசமாக இந்தப் பகுதி இருந்தது. அங்கே யூதர்கள் மெல்ல மெல்ல குடியேறினார்கள். ஒரு கட்டத்தில் அந்தப் பகுதியில் 16 வீதம் பேர் யூதர்களாக வசித்தார்கள். ஆனால் தட்பவெப்பமும் காலமும் ஒத்துழைக்காததால் மெல்ல மெல்ல அங்கிருந்து பல ஊர்களுக்கு இடம்பெயர்ந்தார்கள்.



**யூதர்களை ஜப்பானில் குடியேற்றம்?**

1934-ல் ஜப்பான் மன்னர் ஒரு திட்டத்தை அறிவித்தார். இதற்கு புகு திட்டம் (Fugu plan) என பெயர் சூட்டினார். யூதர்களை ஜப்பானில் குடியேற்றம் செய்தால்

(15ம் பக்கம் பார்க்க))

# புலமைப்பரிசில் பரீட்சை: ஒரு விரிவுரையாளரின் கதை!

கலாநிதி நவரட்ணராஜா
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொறியியற் பீடம், பேராதனைப்
பல்கலைக்கழகம்)

எனது மகன் தற்போது 5 ஆம் வகுப்பு படித்து வருகிறார், அவரது புலமைப்பரிசில் பரீட்சை மதிப்பெண்கள் குறித்து பலர் என்னிடம் கேட்கின்றனர். அவர் புலமைப்பரிசில் பரீட்சை எழுதவில்லை என நான் பதிலளித்தேன், இது பெரும்பாலானோரை ஆச்சரியப்படுத்தியது. ஏனெனில் இந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதற்காக நடத்தப்படுகிறது என்பது நம்மில் பலருக்குப் புரியவில்லை. இந்த தேர்வு இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப் பட்டது:

1) நன்கு படிக்கும் மாணவர் ஒருவர் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பத்தில் இருப்பவரானால், இப்பரீட்சியில் தேர்ச்சி பெறுவது மூலம் அரசாங்கம் வழங்கும் உதவித்தொகையை அவரது கல்விக்காக பெற முடியும்.

2) திறமையான மாணவர் குறைந்த வளங்களைக் கொண்ட பின்தங்கிய பாடசாலை ஒன்றில் படிக்கும் சந்தர்ப்பங்களில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் நாட்டில் உள்ள சிறந்த பாடசாலை ஒன்றிற்கு அனுமதி பெற முடியும்.

கண்டியின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான திரித்துவக் கல்லூரியில் (Trinity College) எனது மகன் கல்வி கற்கிறார். எனவே மேற்கூறிய இரண்டு நோக்கங்கள் ஒன்றுக்காகவும் எனது மகன் பரீட்சை எழுதவேண்டிய அவசியம் இல்லை எனும்போது நான் இந்த தேவையில்லாத அதுவும் சமூகத்திலும், மாணவர்கள் பெற்றோர்கள் மனதிலும் பாரிய தாக்கங்களை தற்போது ஏற்படுத்திவரும் இந்த பரீட்சையை ஏன் எழுத சொல்ல வேண்டும்? Trinity College ஆனது மாணவர் களுக்கும் பெற்றோருக்கும் சுதந்திரம் அளிக்கிறது. மாண வர் பரீட்சை எழுத விரும்பினால் மட்டுமே பதிவு செய்து பரீட்சை எழுத முடியும். இது Kandy Trinity College செய்யும் ஒரு பாராட்டக்கூடிய விடயம் (மற்றய பெரிய பாடசாலைகளும் இதை பின்பற்றி தங் கள் பிரதேசத்தில் உள்ள பின் தங்கிய பாடசாலை மாண வர்களுக்கான வாய்ப்பை அதிகரித்திட உதவிட வேண் டும்). எனவே, எனது மகன் பரீட்சையில் பங்கேற்க வேண் டாம் என முடிவு செய்தோம். எனது மகன் 4 ஆம் வகுப்பு அல்லது அதற்கு முன்பு படித்ததைப் போலவே பாடசா லையில் 5 ஆம் வகுப்பை முடிக்க போகிறார். அவர் வகுப் பில் சிறப்பாகச் செயல்படுகிறார், பெற்றோர்களாகிய நாங்கள் அவரது கல்வி மற்றும் இணைப்பாடவிதான விடயங்களில் அவரது செயற்பாடுகளில் மகிழ்ச்சியடைகிறோம்.



இந்த புலமைப்பரிசில் பரீட்சையில் எனது சொந்த அனுபவத்தையும் நினைவுகூர்கிறேன். 1987 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை (அப்போது இத்தேர்வு தரம் 6 இல் நடைபெறும்) பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றான (அப்போது மிகவும் பின்தங்கிய பாடசாலை) புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் எடுத்தேன். நிச்சயமாக, நான் படிக்கும் போது என் பெற்றோர்கள் எனக்கு ஒருபோதும் சிரமம் கொடுக்கவில்லை, பல தனியார் வகுப்புக்களுக்கு சென்றதில்லை (ஆனால் இப்போது பல பெற்றோர்கள் அப்படி இல்லை, இது தற்போது பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான கௌரவ பரீட்சையாக மாறிவிட்டது). புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஆனால், என்னால் 27 நாட்கள் மட்டுமே அங்கு படிக்க முடிந்தது. என்னை மீண்டும் புளியாவத்தை தமிழ் மகாவித்தியாலயத்துக்கு அழைத்துச் செல்லும்படி எனது தந்தைக்கு தினமும் கடிதம் எழுதினேன். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஒரு மிகவும் சிறந்த பாடசாலை ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த வயதில் எனக்கு அப்பாடசாலை பொருத்தமாக இருக்கவில்லை, நான் அதுவரை ஹட்டன் டவுனுக்கு (எனது கிராமம்- தேயிலை தோட்டத்திற்கு அருகிலுள்ள நகரம்) கூட சென்றதில்லை. 12 வயதில் கொழும்பு எனக்கு புதிய சூழல், அப்பாடசாலையில் என் சக மாணவர்களை (அவர்களில் பெரும்பாலோர் மிகவும் பணக்காரர்கள், மற்றும் 'பெரிய உருவம் உடையவர்கள்"), ஆசிரியர்கள், கட்டிடங்கள் மற்றும் சாலைகள், வாகனங்களைப் பார்த்து பயந்தே போனேன். சிறிது காலம் கழித்து சரியாகிவிடும் என்று என் தந்தை நினைத்தார், ஆனால் அவர் தினமும் நான் அழுதுகொண்டே எழுதி அனுப்பும் கடிதங்களை கண்டவுடன் இறுதியில் என்னை கொழும்பில் இருந்து அழைத்து சென்று மீண்டும் புளியாவத்தை தமிஜழ் மகா வித்தியாலயத்திலேயே சேர்த்துவிட்டார். சாதாரண தோட்ட தொழிலாளியான எனது தந்தை அவரது வரம்பிற்கு மீறி தியாகம் செய்து என்னை பெரிய பாடசாலையில் படிக்க வைக்க நினைத்தார். நான் எப்படியாவது சிறந்த கல்வியை கற்றிட வேண்டும் என அவர் பட்ட கஷ்டங்களை மிகவும் அருகில் இருந்து பார்த்ததாலேயே என் அறிவிற்கு எட்டிய வரையில் என்னால் கல்வியில் சிறந்து பயணித்திட முடிந்தது. என்னை எனது தந்தை படி படி என வற்புறுத்தியதில்லை, மாறாக நான் நீண்ட நேரம் இரவில் கண்விழித்து படிப்பதை பார்த்து என்னை சீக்கிரம் படுக்க சொல்லியே சொல்வார். எனது மிகப்பெரிய பலமே என் தந்தையின் அர்ப்பணிப்பு தான். அவரைப் போல ஒரு 50 வீதம் ஆயினும் எனது மகனுக்கு நான் ஒரு தந்தையாக இருந்தாலே பெரிய விடயம். எனது கல்விப் பயணம் புளியவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் இருந்து மீண்டும் தொடங்கியது, இப்போது நான் எனது கனவிலும் நினைத்திராத ஒரு இடத்தில் இருக்கிறேன் என்பதே உண்மை.

பிள்ளைகளுக்கு இந்த புலமைப்பரிசில் பரீட்சையின் மூலம் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகவும் கடினமான சுமையை கொடுக்கிறார்கள். புலமைப்பரிசில் பரீட்சை ஒரு சிறந்த வியாபாரமாகவும் மாறிவிட்டது. உண்மையில், குழந்தைகள் இன்னும் இந்த சுமையை புரிந்து கொள்ளும் அளவு முதிர்ச்சி அடையவில்லை. எனவே, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் பிள்ளைகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்க வேண்டாம் என பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பிள்ளை சித்தி அடைந்தாலும் அல்லது தோல்வியடைந்தாலும், கல்வியின் பெறுமதியை பற்றிய அவர்களின் புரிதல் காலப்போக்கில் தெரிய ஆரம்பிக்கும். கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவும் சூழலை அவர்களுக்கு உருவாக்குங்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் மற்றும் பிறருக்கு மரியாதை கொடுப்பதன் முக்கியத்துவத்தை அவர்களுக்கு சொல்லிக்கொடுங்கள், ஏனெனில் இந்த பண்புகள் அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் கல்விக்கு மிக முக்கிய பங்களிக்கும்.

●

# வரலாற்றில் இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல்?...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

தன் வழியே ஜப்பானிற்கு பொருளாதார ரீதியில் பல நன்மைகள் ஏற்படும் என அவர் நம்பினார்.

6 லட்சம் பேரை குடியேற்றம் செய்யும் அளவிற்கு அவர்கள் பெரும் திட்டங்களை வகுத்தார்கள். ஆனால் யூதர்கள் ஆபத்தானவரக்ள் என்கிற பயம் ஜப்பானியர்கள் மத்தியில் கடுமையாக இருந்தது. யூதர்கள் அமெரிக்காவிற்கு ஆதரவாகவே நிற்பார்கள், அது ஜப்பானுக்கு ஆபத்தாகவே முடியும் என்று அரசியல் நிபுணர்கள் தெரிவிக்க இந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்.

**ஜெர்மனியில் பல லட்சம் யூதர்கள் கொலை :**

முதல் உலகப்போருக்கு முன் நடந்த போர்களில் இங்கிலாந்து ஜெர்மன் ஆகிய நாடுகளில் யூத ராணுவப் பிரிவு இருந்தன. முதல் உலகப்போரில் இங்கிலாந்து ரஷ்யா பிரான்ஸ் ஒரு பக்கமும் ஜெர்மனி ஆஸ்திரியா இத்தாலி துருக்கி மறு பக்கமுமாக போரிட்டன.

ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சியில் முதல் உலகப்போரின் தோல்விக்கு ஜெர்மனியர்கள் தான் என்றும், ஐரோப்பாவின் வறுமைக்கும் காரணம் யூதர்கள் தான் என்று யூதர்களை வேட்டையாடினார். கிட்டத்தட்ட அறுபது லட்சம் யூதர்கள் கொல்லபட்டனர்.

ஜெர்மனி தான் வென்ற நாடுகளான பெல்ஜியம், போலந்து, பிரான்ஸ், நோர்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் உள்ள யூதர்களை தேடித்தேடி கொன்றது.

**ஜெர்மனி யூதரை மடகாஸ்கரில் குடியேற்ற முயற்சி :**

1940 ஜூன் மாதம் ஜெர்மானியர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அதாவது ஐரோப்பா முழுவதிலும் உள்ள யூதர்களை அங்கிருந்து அப்படியே வெளியேற்றி, அவர்களை ஆப்பிரிக்கா அருகில் இருக்கும் மடகாஸ்கர் தீவில் குடியமற்றுவது என்பது தான் அந்தத் திட்டம்.

பிரான்ஸ் நாட்டை ஜெர்மனி கைப்பற்றிய நிலையில்




பிரான்ஸ் வசம் இருந்த இந்தத் தீவை அப்படியே இந்தத் திட்டத்திற்கு பாவிப்பது என முடிவு செய்தார்கள். அடுத்து பிரிட்டனை வென்று, யூதர்களை ஐரோப்பாவில் இருந்து வெளியேற்ற பிரிட்டனிடம் உள்ள பெரிய கப்பல்களை பாவிப்பது என்றும் தீர்மானித்தார்கள்.

ஒரு வருடத்திற்கு பத்து லட்சம் யூதர்கள் என்கிற கணக்கில் நான்கு வருடங்களில் ஐரோப்பாவில் யூதர்களே இல்லாமல் பார்த்துக் கொள்வது என்பதும் அவர்களின் முழு இலக்காக இருந்தது. ஆனால் போரில் பிரிட்டனை ஜெர்மானியர்கள் வீழ்த்த முடியவில்லை என்பதால் இந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனி தோற்றது. இங்கிலாந்து பாலஸ்தீனத்தில் கொஞ்சம் கொஞ்சமாக குடியேறியிருந்த யூதர்கள் பகுதியை பிரித்து இஸ்ரேல் என்ற தனிநாடாக அறிவித்தது.

**பூங்கொத்து கொடுத்தவர்க்கு குண்டுமழை பரிசா ?**

இங்கிலாந்து தான் வென்றால் துருக்கியின் கட்டுபாட்டிலிருந்து எகிப்து சிரியா ஜோர்டான் லெபனான் ஈராக் ஆகியவற்றை விடுவிப்பதாகவும் இஸ்ரேலை மீண்டும் உருவாக்கி யூதர்களுக்கு தனிநாடாக அளிப்பதாகவும் அறிவித்தது. போரில் ஜெர்மனி தோற்றதால் துருக்கியிலிருந்து பல நாடுகள் சுதந்திர நாடுகளாக வெளியேறின.

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் பாலஸ்தீனமும் சுதந்திரமடைந்தது. அப்போது இஸ்ரேல் தோன்றவில்லை. ஜெருசலேத்தை மட்டும் பிரிட்டன் தன் கையில் தக்க வைத்துக் கொண்டது.

ஐரோப்பாவில் இருந்து, இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் யூதர்களின் கப்பல் பாலஸ்தீன துறைமுகத்தை நெருங்கி போது அதில் இருந்தவர்கள் ஒரு பெரும் பதாகையை ஏந்தி வந்தார்கள் **"The Germans destroyed our families and homes - don't you destroy our hopes"** அதாவது ஜெர்மானியர்கள் எங்கள் குடும்பங்களை வீடுகளை அழித்துவிட்டார்கள், நீங்கள் எங்கள் நம்பிக்கையை அழித்துவிடாதீர்கள் என்றது அந்த பதாகை.

யூதர்கள் ஹிட்லரின் கொடுங்கோன்மையின் கீழ், ஹிட்லரின் ராணுவத்தின் பிடியில் சிக்கிச் சீரழிந்தது கண்டு உலகே கவலையுற்றது. ஹிட்லரைச் சாடியது, வரலாறு ஹிட்லரை ஒரு போதும் மன்னிக்காது.

யூதர்களை அங்கே சென்று இறக்கி விட்டு விட்டு மெல்ல இந்த விசயத்தில் தங்களின் கைகளை கழுவிக் கொண்டது இங்கிலாந்து. இனி இது எங்கள் பிரச்சனை இல்லை ஐநா பார்த்துக்கொள்ளட்டும் என விலகிக் கொண்டார்கள்.

தற்போது பூங்கொத்து கொடுத்த பாலஸ்தீன மனிதர்களுக்கு பாஸ்பரஸ் குண்டுகளைப் பரிசாகக் கொடுக்கும் வரலாறு ஒரு போதும் மன்னிக்காது. அப்படி ஒரு பதாகையை ஏந்தி வந்தவர்கள் இன்று பாலஸ்தீனர்களின் தாயகத்தை நிர்மூலமாக்கி வருகிறார்கள்.

●